356

பாரதி.

தொகுதி:3 பகுதி.

நவம்பர் - 1916

©

JL
ை211, N14B
N16·3·1
162211

MADRAS

பாரதி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்" — திருவள்ளுவர்.

தொகுதி—3 | 1916வருஷ நவம்பர்மீ | பகுதி—1

பாரதி.

நம் ஒரு
ரண்டாம்
ம் நம்
தன்று
புலவர்

செல்வமும் சீரும் செறிந்தினிதோங்கும் பல்வளம் நிறைந்த இப் டத்து, பாரதி என்னும் வாரத் தமிழ்ப்பத்திரிகை சென்ற களாகச் செவ்வனே நடைபெற்றுவந்த செய்தி பலரும் அறி து. இடையே சில நாட்களாக வெளிவராமை, நின்றதன் ம் அறியார்க்குப் பெரிதும் வியப்பைத்தரும். யாம் அப்பத்திரிகையின்கண் என்றும் துரைத்தன விரோதமான விஷயங்களை எழுதியதில்லை. இருந்தும், எக்காரணத்தினாலோ துரைத்தனத்தார் நமதுபத்திரிகை தவறுடையதென எண்ணி 1000 ரூபா ஜாமீனுக்கட்டினாலன்றி அதனை நடத்தலாகாது எனக் கூறிவிட்டனர். பின்னர், யாமதனால் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் பலவே எனினும், அவற்றைஎண்ணாது பாரதியை எங்ஙனமாயினும் மீட்டும் நடைபெறச் செய்யவேண்டும் என்ற எண்ணம் ஒன்றே உள்ளம்கொண்டு பன்முறையும் துரைத்தனத்தாருக்கு மனுச் செய்துகொண்டோம். இடையே பாரதியில் ஆர்வம் உடைய பல சந்தாதாரர்களும், சென்னையில் பிரபல வர்த்தகராய் விளங்கும் எமது நண்பரும், மெஸர்ஸ் S. வைத்தியா அண்ட் கம்பெனி சொந்தக்காரருமான பிரம்மஸ்ரீ சேஷராம ஐயரவர்களும் பிறரும் பாரதியை மாதப் பத்திரிகையாகவாவது நடத்த வேண்டும் என்று நேரிலும், கடிதமூலமாயும் தெரிவித்துக் கொண்டனர். இறைவன் அருளால் அவர்கள் நல்லெண்ணத்தின்படியே துரைத்தனத்

தார் உத்தரவும் கிடைத்தது. பாரதி பண்டைய வடிவமாறிப் புதிய உருக்கொண்டு மாதப்பத்திரிகையாகவும் வெளிவந்தது.

நிற்க, இத்துணை நாள் இடைநின்றும், இப்பத்திரிகையினை ஆதரிக்கும் நோக்கம் ஒன்றையே கொண்ட சந்தாதாரர்கள் பலர்க்கும் யாம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அன்றியும், இது இடையே முட்டின்றி இனிது நடைபெற ஆசீர்வதித்துப் பெரும்பொருளும் உதவிய திருவாவடுதுறை யாதீன மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் அவர்களை வாயார வாழ்த்துகின்றோம். இனி இப்பத்திரிகைக்கு இத்தகைய இடையூறு ஒன்றும் நேராது இனிது நடைபெற எல்லாம்வல்ல இறைவன் அடியிணை இறைஞ்சுகின்றேம்.

பத்திராதிபர்.

162211

பரமன் பக்தி.

உலகத்தை இவ்வளவென்று அளவிட்டுக் கூற இதுகா[illegible] வராலும் முடியவில்லை. வெகுகாலம் நாமிருக்கும் பூமி சதுரமெ[illegible] நாலுபக்கத்திலும் நான்கு ஆழிகளால் சூழப்பட்டதென்று பெரியோர் சொல்லிவந்தனர். பிறகு இது உருண்டைவடிவின[illegible] தெரிந்தும் அசைவற்று நிற்கிறதாகவும் அநேக பண்டைநாட்[illegible]கள் கருதியிருந்தனர். அஃதெல்லாம் மாறி, பூகோளந்தான் சூரிய மண்டலத்தை வலம்வருகிற தென்றும் நாமுறையுமிடத்தைச் சுற்றிச் சந்திரன் சஞ்சரிக்கிறானென்றும் தீர்மானம் ஏற்பட்டது. "சூரிய சமவாயம்" என்று பெயர்பெற்ற ஓருலகின்கண் எத்தனை கிரகங்களோ? எத்தனை நட்சத்திரங்களோ? இத்திருக்கூட்டத்தில் நாமொரு மூலையில் பதுங்கியிருக்கிறோம். இன்னும் அநேக சூரியர்களிருப்பதாகக் கற்றறிந்தோர் கழறுகின்றனர்; ஒவ்வோராண்டும் ஓர்வானநூலில் வல்லவர் புதியஉலகங்களைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் கண்டுபிடிக்கிறார். முற்றுப்புள்ளிபோட்டுவிட்டோம்; விசும்பின்கண் மற்றேதும்நாங்களறியாத பொருளில்லை; என்று துணிவாய்க்கூறும் தத்துவஞானியைக் காணோம். இத்தகைய அகண்ட பிரம்மாண்டந் தன்னில் நானெவ்வளவு என்று ஒவ்வொருவரும் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு கொசுவைச் சதகூறிட்டால் அதிலொன்றுக்கு இணையாவேனோ? ஏது! அங்ஙனம் நினைப்பது மதியீனம். இதை நன்குணர்

JL
ma 211, N148
N16-3-1

ந்தே சான்றோரெல்லாம் "நான் சிறியேன், நான்கடையே" னென்று பல்காற் பகர்ந்துளார். உற்றுநோக்கின் நீல விதானம்போன்ற ஆகாயம் கண்ணுக்கெட்டாதவாறு பரந்து விளங்குகின்றது. கிழக்குமேற்காய் ஓயாமல் ஒளிபரப்பி, பிராணிகளுய்யுமாறு ஆதவன் உலவுகிறான். கடலோ ஒருபுறம் ஓயாமல் கத்துகின்றது. இதென்னவிந்தையானகாட்சி. இதைக்கண்டால் அச்சமும் உண்டாகிறது. மலர்களையும் கனிகளையும் கண்டு மனமகிழ்வோம்; புலிகளையும், பாம்புகளையும்கண்டு மனமகிழ்வோம். சற்று இன்புறுகிறோம். சற்று முகம்வாடி மங்குகின்றோம். இதென்ன! மழைகாலச்சூரியன் தோன்றிமறைவதுபோ லிருக்கிறதே, மானிடவாழ்க்கை? தாயின் வயிற்றிற்பிறந்தபோதுதானா நமக்குப் பிறப்பு? மயானமண்ணில்மாளாத் துயிலை அடைகின்றோமா? அல்லதுமறுப
[illegible]ைபுதிதாய்க்கிடைக்குமா? நாமென்பது உடலைக்குறித்ததா?
[illegible]னுக்களை நுண்ணறிவாளர்கள் பண்டை நாட்களிலிருந்து ஐய
[illegible]எவ்வளவோ முயன்றார்கள்! ஐம்புலன்களுக் கெட்டாத
ஒரு [illegible] பொருள்களை உணர நம்மா லியலுமா? ஆனால் நாமுய்யும்
மும் [illegible]ான்ன? பிணியால் வருந்துவோனுக்கு மருந்தளிப்பதுபோல்,
நம் [illegible]ந்திடின் புசித்தும் உடல்களைப்பினுறங்கியும் வாணாளை யொழி
று [illegible] தகுதியா? அறிவைத்தான் ஏராளமாய்ப்பெறினும், முடிவெ
வர் அ[illegible] அதனால் சுக மதிக்கப் படுவதாகவும் தோன்றவில்லை.

"இருக்கை" என்னும் தன்மைவாய்ந்த பதார்த்தங்களனைத்திற்கும் பொதுமையான குணமொன்றுண்டு. "இன்பம் வேண்டும்; இன்பம் வேண்டும்," என்ற ஆவல். இதை நாடியே மண்ணுலகில் நாம் ஓடியலைந்து பொருளையும் புகழையும்பெற, தலைகால் தெரியாமல் தவிக்கின்றோம். நம்முடையசக்தி அணுவினாயிரத்திலோர் பங்கென்று கூடச்சொல்லத்தகாது. ஆனால் சற்றுத் தூரம் "நான்" என்னும் மனக்குதிரை ஏறி இறைவனைச் சவாரி செய்கிறான். நண்பன் இடரென்னும் கற்பாறையில், பரிமோத, தானும் சற்றுமருளி மனந்தெளிந்து "ஆகா! புல்லேன் யான்; உலகைப் படைத்தோனொருவனுளன். அவன் கன்னெஞ்சஞ்சத்தானன்று. அவனைப் போற்றியன்றோ நன்மைபெறவேண்டும். இஃதென்ன பேதைமை" என்றுணருகிறான். தெய்வத்தை நினைக்கத் துன்பம் ஓர் கருவியாகின்றது. ஆகையால் குந்திதேவியும் கண்ணனைநோக்கி. "என் கண்மணியே, இன்னல்களைத்தா. அப்பொழுதல்லவோ, உன் தாமரைத் தாளிணையை நான்

தழுவிநிற்பே”னென்றாள். பூமியினின்றும் வெட்டியெடுத்த தங்கக் கட்டி சுத்தமன்று. அதை நெருப்பில் காய்ச்சவேண்டும். சூடு நன்றாய்த் தாக்க, அதனைச் சார்ந்த மலங்களெல்லாம் நீங்கிவிடும். பத்தரைமாற்றுப் பசும்பொன்னாய்த் தகதகவென்று மின்னத்தொடங்கும். இவ்வாறு துன்பத்தீயி லகப்பட்ட ஆன்மா தன்னைச்சார்ந்த தீவினைகளெரிந்துபோகச் சுத்த நிர்க்குணம் பொருந்தினவனாய் 'மகா' னென்னும் பதவியைப்பெறுகின்றான். ஆனால், இடுக்கண்களை அகற்றி இன்பத்தைப்பெற ஈசனை இறைஞ்சுவோமென்ற எங்களுக்கு, அவைகளையே தேடிச் செல்லென்னும் உபதேசம், அலறுங் குழந்தைக்கு “பூச்சாண்டி” பயங்காட்டும் நீதியாயிருக்கிறதே? வீட்டில் எலித் தொந்திரவில்லையோ என்று கேட்பவனுக்குப் பாம்புதானிருக்கிறதே அதை விழுங்க என்று மறுமொழி கூறுவதுபோலிருக்கிறது, என்று நண்பர் கூறலாம்.

மற்றொரு புத்தியுண்டு. கழுத்தில்கல்லைக் கட்டிக்கடலில்விழுமென்றொருவரும் போதிக்கவில்லை. பிறவிக்கடலில் நீந்தவேண்டுமே? ஒரு புறஞ்சுறாமீன், ஒரு புறம் திமிங்கிலம்,ஒருபுறம் ஓங்குமலை. இந்தத்திருக்கூத்தில் நாமிருக்கின்றோம். அக்கரை என்று காண்பது? நாணைச் செல்ல கைவலி போதாதோ? கால்வலி போதாதோ? ஓர் மரக்கலம் கிடைக்கின் பிழைத்தேன். நான், என்ற உணர்வு ஒருகாலத்தில் அநுபவசித்தமாய் உண்டாகும். இத்தகைய உயர்நிலையடைந்த பெரியோர் “ஐயனடியிணையே சமுசாரக்கடலைத்தாண்ட நமக்கோருடையா ஓட” மென் றடிக்கடி கண்ணீருங்கம்பலையுமாகக் கூறியுள்ளார்கள். நாம் போகாத ஊருக்குப் போகுங்கால் அவ்விடத்துப் பழக்கமுள்ளோனை வழி கேட்பதுபோல், நாம் தேடுஞ் சுகத்தைக் கண்டறிந்த ஞானிகளின் வார்த்தைகளைப்படித்தும் ஆராய்ந்தும், அவர் சுட்டிக்காட்டும் நெறியைக் கைபிடித்தல்வேண்டும். இதற்கே நூல்களனேக மேற்பட்டிருக்கின்றன.

காரியமாகவேண்டுமானால் கடவுளைக் கும்பிடுவது நமதியற்கையல்லவா? இஃதோர்விதமான வியாபாரமென் றியம்புவர் பெரியோர். கடையில் வீற்றிருக்கும் மனிதன் கையில் பணத்தைப்போட்டால் வேண்டுவதைத் தருகின்றான். 'பிறகு நமக்கு மவனுக்கு மென்னபந்தம்? “இல்லை, நாளைக்கு நீங்கள் நம்மண்டை வரவேண்டும்,

சாமி” என்றவன் சொல்வதும் ‘நன்னாயிருக்க உன்னைவிட்டு இன்னொரு பயல்கிட்ட நான்போய்வாங்குகிறதா பயித்தியக்காரா” என்று நாம் சொல்வதும் உபசார வாக்கல்லவா? நான் வேறோரிடத்தில் முகரு மிந்திரியத்தை மகிழ்விக்கும் மணமெங்கேயாவது கமழ்ந்தால், அந்த இடத்து நெய்யை நாடிச்செல்கின்றோமோ, அல்லது சற்றே நின்று “இல்லை இல்லை பாவம் நேற்றுக்கூட அவன் அவ்வளவு பிரியமாய்ச் சொன்னானே. போனவுடனே. 'நம்மய்யரு' என்று மணை போடுகின்றானே. ஆயிரம் மட்டச்சரக்கானாலும் அவனுதரவுக்காக அதைத்தான் வாங்கவேணும். ஆனாலும் இந்தச் சாமான்களையும் வாங்கிப் பார்ப்போமே. அப்பா, என்ன சுகமான வாசனை” யென்று அதனுள்ளே இழுக்கப்பட்டு நேற்றுக்கடைக்காரனை மறக்கின்றோம். இத்தகைய வியாபாரம் நம்மையாளு மண்ணவோடு கூடச்செய்து வருகின்றோம். பாருங்கள், “பரீட்சை தேறும்படிச் செய்யும் படிவாசற் பிள்ளையாரே. உன் சந்நிதானத்தில் நூற்றெட்டுத் தேங்காய் உடைக்கின்றே” னென்று பாமனோடு பத்திரமெழுதும் வகைபையன் பேசுகின்றான். வீட்டுப் பெண்பாலும் “சுவாமீ, என்தோட்டுத் திருகெங்கேயோ விழுந்துவிட்டது. அவாளுக்குத் தெரிந்தாலென்னுடம்பில் உயிர்வைக்கமாட்டார். கச்சேரியிலிருந்து திரும்பிவருமுன் எனக்கது அகப்பட்டால் உனக்கொரு சேர் கறந்த பால் நுரையுடன் நைவேத்தியம் பண்ணுகிறேன்” என் றீசனைப் போற்றுகின்றாள். ஆனால் இந்தக் கொடுக்கல் வாங்கலாகிய தொழில் ஐயனை முற்றிலும் மறப்பதைக் காட்டிலும் மிகச் சிறந்ததே. காரியங் கைகூடாவிடில் “பாழுந் தெய்வமே” என்று முறையிடுவதுதான் மிருகத்தன்மை. விரும்பியதையடைய பிரபுவின் பாதத்தைநாடுவது நன்றுதான்; ஆயின், அந்தப் பொருளிலல்லவோ நாமன்பைச் செலுத்தி அதைப்பெற நம் மாபத்பாந்தவை ஒரு கருவியாக நினைத்துவரவேண்டும்!

K. S. R. B.A. L.T.

பிரபஞ்ச பாலிகன்.

என்னும்

ஒரு வாரத் தமிழ்ப் பத்திரிகை.

அடுத்த ஜனவரிமீ முதல் வெளிவரும்—வருட சந்தா ரூபா மூன்று.
இதனை ஒவ்வொரு தமிழபிமானியும் ஆதரிக்கக் கோருகிறேன்.

கோ. கன்னியப்பாச்சாரி,
நெ. 5/10 வேதகிரிமேஸ்திரிவீதி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

ஒழுக்கம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

'ஒருவன் நல்ல நூல்களைத் தெளிவாகக் கற்கட்டும், கற்றபின் கற்றவழி நடக்கட்டும்' என்றார் திருவள்ளுவர். ஒருவனுக்குப் படிப்பினும் சிறந்தது ஒழுக்கமே. நல்லொழுக்க மில்லாவிடில் எவ்வளவு படிப்பாளியாயிருப்பினும் பலராலும் அவன் மதிக்கப்படான். நல்லொழுக்கமுள்ள ஒருவன் அதிகப் படிப்பில்லாது போயினும் நன்கு மதிக்கப்படுவான். உலகம் என்பது நல்லொழுக்க நிறைந்த பெரியோரது கூட்டமாம். ஒழுக்கமில்லாவிடில் நமக்கும் காட்டுமனிதர்க்கும் பேதமில்லாது போகும். ஒவ்வொருஜன சமூகத் (Society) திலும் ஒவ்வொருவிதமான சிறப்பொழுக்கம் உண்டு. அதனை எண்டுக்கூறுவது அனாவசியம். ஆனால், யாவருக்கும் பொதுவான ஒழுக்கங்கள் சிலவுள. அவற்றை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். அவ்வொழுக்க நடையைத் தெரிந்துகொள்ளுவதால், அவ்வொருவரும் தெரிந்து கொள்ளுவதால், எந்த விடத்தும் நாம் கவுரவம்பெற இடமுண்டு. அவற்றிற் சிலவற்றைக் கூறுவேன்.

ஒழுக்கங்களைப்பொதுவாக நடை, உடை, பாவனை என்ற முத்திறத்துள் அடக்கலாம். அவற்றுள் நடையென்பது நாம் பிறர்மாட்டு நடந்துகொள்ளும் மாதிரியாம். யாதாமொரு புதியவரைக் கண்டபோது பெரியவராயிருப்பின் வணங்குதலும், சிறியவராயின் வந்தித்தலும் அத்தியாவசியமாகப் பழகிக்கொள்ள வேண்டும். மேலும், ஒருவரைக் காணும்போது சிரித்தமுகங் காட்டலும், இனிய வார்த்தைகளைப் பேசுவதும், பெருங்குணமாக மதிக்கப்படுகின்றன. அன்றியும் பெரியாரைக் காணின் தலைவணக்கமாயிருத்தல், அதிகம் வார்த்தை பேசாமை, கவுரவமாக மொழியாடல், அவர் சொல்லுவதை முற்ற முடியக்கேட்டல், அவரது சொல்லைத் தடுத்துப் பேசாமை முதலியவை சிறுவர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய குணங்களாம்.

நாம் பெரியாரிடத்துத் தலைவணக்கமின்றி நிற்பது, அடங்காமை, பெரியோரை மதியாமை முதலிய துர்க்குணங்கள் நம்மிடத் திருப்

பதைத் தெரியப்படுத்தி நமக்கவர் செய்யநிற்கும் பல நன்மைகளையும் செய்யாதபடி தடுத்துவிடும். அதிகவார்த்தை பேசுவதால், அவர்கள் சொல்லவிருக்கும் அறிவிற்சிறந்த விஷயங்களை நாம் அறியமுடியாதபடி போவதுடன் நம்மைப்பற்றிய கெட்ட அபிப்பிராயமும் அப்பெரியாருக்குண்டாகும். கவுரவமாக வார்த்தைபேசத் தெரிந்துகொள்ளாவிடின், நம்மைப் பலரும் நற்பழக்கத்திற் பழகாத பட்டிக்காட்டாரென்று மதிப்பார்கள். மேலும், நல்ல பெரிய கூட்டங்களில் நம்மை யறியாதவர்போல நடித்துப் பாராமுகமாயிருந்து நமக்குச் சனசமூகத்தில் வரநிற்கும் பயனை யடையாதபடி தடுத்துவிடுவார்கள். பல பெரியாரும் நம்மை நல்லவரென்றும் யோக்கியரென்றும், மரியாதை தெரிந்தவரென்றும் கருதுவதே நமக்குச் சிறந்த அழகும் ஆபரணமுமாம்.

'குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மட்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னு நடுவு நிலைமையாற்
கல்வியழகே யழகு' நாலடி.

என்ற பாட்டைக் கவனியுங்கள், கவனித்தீர்களானால் சிறப்பினாலேயே நல்லவர் கெட்டவரென்ற நாமம் நமக்கு வருவதெனவிளங்கும். அதனால் மரியாதையாக மொழியாடி, கவுரவமாக நடந்துகாட்டி, நமது நன்மனத்தைச் செயலாற் பலருமறியச் செய்து சிறப்பதே நாம் உடலடைந்ததற்குத் தக்கபலனாம்.

நம்மினும் வயதிலும், கல்வியிலும், அநுபவத்திலும் சிறந்த பெரியார்கூறும் மொழிகள் எப்பொழுதும் சீரிய மொழிகளே யன்றிப் பயனில் சொல்லாகா. அவற்றை முற்றமுடியக் கேட்காது விட்டால் அவற்றால் நாம் பெறக்கூடியபயனை யடையாமற் போவோம். 'நெருப்புச்சுடும்' என்ற ஒரு அநுபவ மொழியைத் தாய்தந்தையர் ஒரு சிறுவனிடத்துச் சொல்லும்போது அச்சிறுவன் அம்மொழியை உட்கொள்ளாவிடில் அவன் கதியாகும் என்று கருதுங்கள். அச்சிறுவனே அப்பெரியார் மொழியைத்தட்டி நெருப்பிற் கைவைப்பானானால் அவனது கையைச் சுட்டுக்கொண்டு கஷ்டப்படுவா னல்லவா? ஆதலால் பெரியாரது சொல்லை முற்றமுடியக்கேட்டு, அவர்களைத்

தடுத்துப்பேச முயலாது, அவர்கள் மொழிப்படி நடக்க முயல வேண்டும். உடை பாவனைகளைப்பற்றி இன்னொருமுறை சொல்லுவேன்.

சிவத்தியாநாநந்தன்,
ஆநந்தாச்சிரமம்,

தமிழ்நாட்டு மாணவர்.

இவ்வுலகத்தின் கண்ணே உள்ள பாஷைகள் பதினெண்வகையாகும் என, தமிழ் மக்கள் கூறி இருக்கின்றனர். ஆனால் இப்போது இவ்வுலகில் அநேக பாஷைகளுள. நந்தமிழும் இவைகளுள் ஒன்றே.

செந்தமிழ்நாடு பரதகண்டத்துத்தெற்கில், குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான்கெல்லைக் குட்பட்டதாகும். இந்நாட்டை மூன்றாக வகுத்து மூன்றரசர் ஆண்டுவந்தனர். அவர்கள் பாண்டியர், சோழர் சேரர் எனும் அரசர்களே. இவர்கள் மூவருமே தமிழ்மகவைத் தம்மிடத்திருத்தி ஆதரித்து வந்தவர். பரமனால் அருளப்பட்ட சங்கப்பலகையிலிருந்து புலவர்கள் கவியரசு நடாத்தியது இவர்கள் நாட்டகத்தேயாம்.

தமிழ் என்னும் பதத்திற்கே இனிமை எனப்பொருள். இதனாலேயே தமிழ் இனிமையான பாஷை எனத்தெரியலாம். இது ஆரியத்தைப்போல் தனிபாஷையே. இத்தமிழ்ப்பாஷை இந்துணைநாள் நிலைபெற்றிருப்பதற்குக் காரணம் ஆரியம்போலல்லாமல் மற்றப் பாஷைகளோடு இயைபுகொண்டிருந்ததேயாம். ஆரியமோ, மற்றப் பாஷைகளோடு இயைபுகொள்ளாததால் சிலநாள் இருக்கும் இடம்தெரியாமல் இருந்தது. இத்தமிழினின்றே மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலியதென்னிந்திய பாஷைகள் உண்டாக்கப்பட்டன என்று (Philolgy) அறிந்தவர் கூறுகின்றனர். இதனாலேயே தென்னிந்தியாவைத் தமிழகம் எனக் கூறுகின்றனர்.

இத்தமிழ்க்கு முதலாசிரியர் பரமசிவன் என்றும் இதை அவர் அகத்தியர்க்கு அருளினார் என்றும், 'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளியதற் கிணையாத், தொடர்புடைய தென்மொழியை யுலக

மெலாந் தொழுதேத்துங், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற், கடல் வரைப்பி னிதன்பெருமை கணித்தறிவார் யார்' என்று

காஞ்சி புராணத்தில் கூறியுளது. இன்னும் சங்கப்புலவர்களில் பரமனும் ஒருவர் எனத் திருவிளையாடலில்,

கண்ணுதற் பெருங் கடவுளுங் கழக மொடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந் தமிழேனை
மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப் படக்கிடந்ததா வெண்ணவும் படுமோ

எனக் கூறியுளது. சங்கம் மூன்று அவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பவை. அவற்றுள் முதற் சங்கத்தில் 549-புலவரும், இடைச்சங்கத்தில் 59-புலவர்களும் கடைச் சங்சகத்தில் 49-புலவரும் இருந்தனர். முதற்சங்கத்தில்தான் பரமன், முருகப்பெருமான், அகத்தியர், முடிநாகர் முதலியவர்கள் இருந்தனர். இச்சங்கப்புலவர்கள் பாண்டி நாட்டிற்குத் தலைநகராகிய மதுரையின் கண்ணே பொற்றாமரைத் தடாகத்தில் சங்கப் பலகையில் வீற்றிருந்தார்கள்.

முதற்சங்கக் காலத்தில் அகத்திய மாமுனிவர் அகத்தியம் எனும் இலக்கணத்தை வகுத்தருளினார். இதுதான் முதலிலக்கணம். இதில் தான் முத்தமிழ்க்கும் இலக்கணம் உளது. இதற்குப் பிறகு இவர் சீடர் தொல்காப்பியர் தொல்காப்பியம் எனும் இலக்கணத்தைச் செய்தருளினார். இதில் இயற்றமிழிற்கு மாத்திரம் தான் இலக்கணம் கூறியுளது. இதுதான் இடைச் சங்கத்திற்கும் கடைச் சங்கத்திற்கும் இலக்கணமாயிருந்தது. அகத்தியம் மறைந்துவிட்டது. இதனால் இசைத்தமிழும் நாடகமும் மறைந்துவிட்டன. கடைச்சங்கக் காலத்தில்தான், திருவள்ளுவர், தமது திருக்குறளைக் கடைசங்கத்தில் அரங்கேற்றினார், அது நீதியைப் போதிக்கும் மிகச் சிறந்தநூல். அக்காலத்தில்தான் நக்கீரர், கபிலர், இடைக்காடர், ஔவை முதலியவர்கள் இருந்தார்கள். இது தற்காலத்து ஆராய்ச்சியின்படி ஏறக்குறைய கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்ததாகத் தீர்மானிக்கப்படுகிறது.

தமிழ், படிக்கப் படிக்க ஆனந்தத்தைத் தரும் பாஷை. கம்பராமாயணம் முதலிய நூல்கள் படிக்கப்படிக்க அநேகவித பொருள்கள் தருகின்றன. பிறபாஷையோர் தாம், தமிழில் படிப்பதைத் தமது பாஷைகளில் மொழிபெயர்த்துக் கொள்கின்றனர், அதுபோல் நாமும் மற்றப்பாஷைகளிலுள்ள அரியவிஷயங்களை நமது பாஷையில் மொழிபெயர்த்துக்கொள்ள வேண்டும்.

நாம் மற்ற இரண்டு தமிழாகிய இசை நாடகம் என்பனவற்றை வளர்க்கவேண்டும். நமக்கு வசனத்தில் அநேக நூற்கள் இல்லாதிருத்தல் ஓர்குறை. அதைக்கற்றறிந்தோர் நீக்கின் இத்தமிழ் நாட்டிற்குப் பெரும் பிரயோசனமாக இருக்கும்.

தமிழ் நாட்டு மாணவர் சிலர் தமிழைக் கவனியாதிருக்கின்றனர். அதன் காரணம் என்னோ அறியோம். நாம் பெற்றோரைச் சந்தோஷிக்கச் செய்தது பிறபாஷையாலோ நமது தமிழாலோ? இதனாலேயே நாம்பிறபாஷைகளைப்படியாமல் இருத்தல் வேண்டும் என்பதல்ல. நாம் பிறபாஷைகளைப் படித்து அவைகளிலுள்ள அரிய விஷயங்களைத் தமிழில் மொழி பெயர்க்கவேண்டும்; பாஷையை விருத்திசெய்யவேண்டும் என்பதே. ஆகையால், மாணவர்கள் தாங்கள் படிக்கும் பாஷையோடு தமிழையும் படித்து வருவார்களானால் நலனடைவோராவர். எங்கே நலனடைவது!

இப்போது நம்மையாளும் ஆங்கிலத் துரைத்தனத்தார் இந்நாள் அடிவைத்ததும், ஆங்கிலமும் நந்தமிழோடு உறவாடிவந்தது. பின்னாட்கள் செல்லச்செல்ல, 'ஒண்டவந்த பிசாசு ஊர்ப்பிசாசைத் துரத்திய' தென்னும் பழமொழிக்கேற்ப, பிறந்து வளர்ந்து பயின்று சுகித்திருந்த நந்தமிழ்ப் பாஷையை அவ்வாங்கிலமானது ஓட்டிவிட்டதென்றே சொல்லலாம்! அதற்கு, இப்போது நந்தமிழ்மக்கள் தங்கள் கருத்தைத் தமது மனைவி மக்களுக்குத் தெரிவிக்கும் காலத்தும், 'நோ, நான்சென்ஸ்' என்பன முதலிய சொற்களை உபயோகிப்பதே போதிய சான்றாகும் அன்றியும் சிலராம் நம்மவர் "தமிழ் என்பது என்ன? அதுவென்ன, பாஷையா?" என்றும் கேட்பதனால் வெளியாம். அத்தகையார், பாவம் மேனாட்டிற் பிறந்திருக்க வேண்டியவர், ஏதோ புண்ணிய மிகுதியால் இந்நாட்டிற் பிறந்தும் பாவசங்கற்பத்தால், இக்கதிக்காளாயுள்ளார். அம்மட்டோ தமிழிற்கு ஆங்கிலம் செய்த கொடு

மை. வயதுவந்த பெரியோர்களாம் தமிழர்மாத்திரம் ஏன் அப்படியிருக்கவேண்டும். சிறுபிள்ளைகளையும் அவ்வாறேபழக்கி, தமிழின் வேரையே அடியோடொழித்து விடவேண்டும் என்றும் கங்கணம் கட்டிக் களிப்புறுகிறது தங்கவே வந்த ஆங்கிலம் என்னும் இங்கிலீஷ் பாஷை.

சில நாளாக, ஆங்கிலம் பயிலும் மாணவர்கள் தங்கள் பள்ளிக்கூடத்தில், தமிழையும் உடன் பயின்றுவந்தனர். துரைத்தனத்தாரின் பகுப்பாம் கல்விவிசாரணைத் தலைமை அதிகாரிகளும், இத் தமிழை மற்றைய பாஷைகளோடு ஒப்பாகப் பாராட்டிவந்தனர். இப்போதோ அக்கொள்கை அவ்வதிகாரிகளுக்கு மாறிவிடவே, எப்போதொழியும், எப்போதொழியும் நாம் தமிழ்ப் படிப்பது, என்று எதிர்பார்த்திருந்த தமிழ் கற்கும் மாணவர்க்குக் கொண்டாட்டமும், தமிழில் சிரத்தை வைத்துப்படிக்கவேண்டும் என்ற கொள்கையையுடைய மாணவர்க்குத் திண்டாட்டமும் ஆயது.

அந்தோ! தமிழை மனப்பூர்வமாகப் படிக்கவேண்டும் என்று பிரியமுடைய மாணவரும் மற்றையோரைப்பார்த்து, அக்கொள்கையில் மாறிவிடுகிறார்களே! தமிழில் தேரவேண்டும் என்பது கட்டாயம் அல்லவாகையால், எப்படி இருந்தால்தான் என்ன என்று சிலர் உபேக்ஷை செய்கிறார்களே! இப்படி எல்லாம், தமிழ்நாட்டிற் பிறந்த சிறுவர்கள், தமது தாய்ப்பாஷையின் மகத்துவத்தை அறியாது, அதனை மறந்து புறக்கணிப்பது நியாயமாமோ? தமிழின் உயர்வென்ன! அதன்கண் உளதாம் இன்பினை நுகர்ந்தார் அதனைக் கைவிடுவரோ! பள்ளிக்கூடத்து மாணவர்களே! நீங்கள், பெற்றதாயை ஆதரியாது பிறர்தாயை ஆதரிப்பார் போன்று ஆயினீரே! நீங்கள் அல்லவா தாய்ப் பாஷையை விருத்தி செய்வதற்கு முயற்சிசெய்ய யோக்கியம் ஆனவர்கள்! பிறநடைய மயக்கினால், மயங்கி, அருமந்த தமிழை அலையவிடாதீர், நந்தமிழ்ப்பாஷை உலகத்துப் பர்ஷைகளுள் எல்லாம் ஒப்புயர் வற்றது. அவ்வுண்மையைத் தெரிந்தாவது, அதனைப்படித்துப் பண்புடையாமின்.

தமிழ் மாணவன்.

உலகமாம் நாடக மேடை.
(SEVEN AGES OF MEN)

கடலால் சூழப்பட்ட இவ்வுலகம் நாடகம் நடிக்கும் மேடைபோலுளது. இதிலுள்ள நாம் நாடகம் நடிப்போரே. நாடகம் நடிப்போர் அநேகவிதமாக வேஷந்தரிப்பதுபோல், நாமும், ஏழுவிதமாக இருந்து இவ்வுலகமாம் நாடகமேடையில் நடிக்கிறோம்.

முதன் முதலில் நாம் சிறு குழந்தையாக இருந்து தாயின் முலைப்பாலைப்பருகிச் சந்தோஷித்தும், மண்பிரண்டு உண்டும், உடம்பை அசுத்தப்படுத்திக்கொண்டும், சிலவேலைகளில் அழுதும், முழந்தாளால்நகர்ந்து தாய் தந்தையர்க்குத் தாளவொண்ணுக்கஷ்டத்தைத் தருகிறோம். நாமோ அக்காலத்தில் ஒருகஷ்டமுமில்லாமல் சுகமாக இருக்கிறோம். அப்போது நமக்குக் கெட்டவை நல்லவை தெரியா.

ஐந்தாம் வயது கிட்டிய உடன் நமது பெற்றோர்கள் நாம் கல்வி கற்க, தகுந்த ஆசானைக்கொண்டு அக்ஷராப்யாசம் செய்து கணக்காயரிடம் விடுகின்றனர். பிறகு அவ்விடத்திலிருந்து நாம் நூற்களிற்கூறிய குணங்களை உடைய ஆசானைத்தேடி அவரிடம் பெருநூற்களை வான்முறையாகக் கேட்கிறோம். முதலில் பள்ளிக்கேகும்போது கஷ்டப்படுகிறோம். பிறகு கல்வியின்மேல் உண்டான அன்பினாலும் பள்ளி மாணவர்கள் சிநேகத்தாலும் சந்தோஷமாகப் பள்ளிக்குப் போகிறோம்.

படித்து முடிந்தவுடன் அழகும் குணமும் வாய்ந்த மனைவியைத் தெரிந்தெடுத்து, வேதநூற்படி மணந்து, புத்திரர்களைப் பெற்று கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம் நாமகரணம், முதலியவைகளைச் சாத்திரோக்தமாய்ச் செய்து களிக்கிறோம்.

பிறகு கிருகஸ்தாச்சிரமத்திற் கேற்ப எற்போற்கு இல்லை என்னாது அறம் மெலியாமல் இல்லறம் நடாத்துகிறோம். உழுதோ, வர்த்தகஞ்செய்தோ, அரசனுக்குப் பகுதிகட்டி, பெற்றோர், மனைவிமக்கள், குரு இவர்களைக் காப்பாற்றுகிறோம்.

இதற்குள், நமது தாய்தந்தையர்கள் சிவகதி எய்துகின்றனர். அவ்வமயம் அவர்களுக்கு ஈமச்சடங்குகளைச் சரிவரச்செய்து, பிரதி

வருடமும் அவர்களுக்குச் சிரார்த்தம் செய்து, தினமானம் நித்தியானுஷ்டானஞ் செய்யும்போது தர்ப்பணமுஞ் செய்கிறோம். பெரியோர்களுடன்கூடி நீதிசாத்திரங்கள் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். இன்னும் சாத்திரங்களில் கூறியபடி கடவுள் வழிபாடு செய்கிறோம்.

இச்சமயத்தில் நமக்கு நரை, திரை முதலியன உண்டாகின்றன. வெளியில் செல்ல முடியாதிருக்கிறது. புத்திரர்களின் சௌகர்யத்தால் போசனஞ் செய்துகொண்டு சதா ஈஸ்வரத்தியானம் செய்துகொண்டிருக்கிறோம். சிலகாலம் சென்றபிறகு பேசவும், நடக்கவும், எழுந்திருக்கவும் முடியாமற் போய்விடுகிறது. கடைசியாகத் தென்பதி அடைகிறோம். அப்போது நமக்குப் புத்திரர்கள் ஈமச்சடங்கு செய்கிறார்கள்.

மேற்றிசைக்கண்ணுள்ளோர் இவ்வாழ்நாளைக் கீழ்வரும் ஏழுவிதமாகப் பிரித்திருக்கின்றனர்.

1—சிறுகுழந்தை.
2—மாணவன்.
3—காதலன்.
4—வீரன்.
6—நியாயாதிபதி.
6—கிழவன்.
7—இறந்தவன்.

தேன்பட்டினம் - மீ[illegible]க்ஷிசுந்தரன்.

நீதிவசனபோதம்.

அறத்துப்பால்—துறவறவியல்.

1-வது அதிகாரம்-செல்வநிலையாமை.

நாம் செல்வத்தை நிலையுள்ளதாக எண்ணி, அதனாற் பெருஞ்செருக்கடைகிறோம். அப்படி நாம் இருப்பதன்காரணம், அச்செல்வத்தின் நிலைமையை உள்ளவாறு அறியாமையேயாம். "நேற்றுச் செல்வனாக இருந்தான். அவன், இன்று ஏழையானான்" என்று எத்தனையோபேர்கூற, அதனை நாம் காதாரக் கேட்டதில்லையோ? தித்திப்பு. புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்று சொல்லப்படும்

ஆறு சுவைகளமையப்பெற்ற உணவின்வகைகளைத் தமது மனைவிமார்கள் எதிர்வந்து, ஆசையோடு இடையிடையே அமுதமொழிகளைச் சொல்லி ஊட்டுங்காலையில், ஒரு கவளத்தை உண்டபின்னர், மற்றொருகவளத்தை நீக்கி உண்பார் எவ்வளவு செல்வப்பெருக்குள்ளவராக இருக்கவேண்டும்? அத்தகையோரும், பரமதரித்திராய்ப் பதங்குலைந்து, தாம் முன் ஓ என உயர்வுடன்வாழ்ந்திருந்த அவ்விடத்திலேயே அற்பக்கூழிற்குக் குறம்பாடுகின்றனரே. இதை நாம் கண்கூடாகப் பலவிடத்தும் கண்டிருக்கிறோமே. ஆதலால் இச்செல்வப்பொருள், நிலையுள்ள பொருள்களோடு வைத்து எண்ணும் தகுதியுடையதல்ல என்பது தெற்றெனத் தெரிகின்றதல்லவா?

இனி, செல்வப்பொருள் எவரிடத்தேனும் அழியாது நிலைபெற்றிருக்கக்கண்டிருக்கிறோமா என்பதை நாம் கவனிப்போம். அப்படி அது ஒரே மனிதனிடத்தில் அழியாமல் என்றும் நிலைபெற்றிருந்ததாக நாம் கேட்டதே கிடையாதன்றோ? உலகம் தோன்றிய நாள்முதல் எடுத்துக்கொள்வோம். எவரிடத்தில் இச்செல்வம் நிலைபெற்றிருந்ததாகத் தெரிகிறது? இன்று ஒருவரிடத்தும், நாளை ஒருவரிடத்தும், வண்டிச்சக்கரத்தைப்போல மாறிமாறிச் சுழன்று வருகிறதேயன்றி, நிலைபெற்றிருந்ததாக நாம் பார்க்கவுமில்லை, கேட்கவுமில்லை. ஆதலால், நாம் தருமவழியாற் சம்பாதித்த பொருள் நம்மிடத்துளதாயின், அதனை அழகுபார்த்துவாளா இருத்தலாகாது. நம் வயிற்றையே வளர்த்துப் பெருக்கவைத்துக்கொள்ளும் எண்ணங்கொள்ளலுமாகாது. பயிர்செய்து, அதனாற்கிடைத்த உணவை, விருந்தினர் முதலானோருடன் உண்ணலே தகுதி. அப்படி அதனைப் பிறருக்கும் இட்டு நாமும் உண்பதால் புண்ணிய பலன் பெரிதும் உண்டாம். உண்ணவருவாருள் எவரேனும் ஒரு பெரியர் வாராமற்போவரா? அப்பெரியார்க்குணவளித்தலால் உண்டாய பெரும்பயன் நம்மையன்றே அடையும். ஆதலால், நாம் கைப்பொருளுடையராகப்பெற்ற அந்நாள்முதல் சதலருடன் உண்ணும் பழக்கத்தையே வழக்கமாய்க்கொள்ளல்வேண்டும்.

செல்வம், செல்வோம் என்ற பொருளையுடைத்தாய் இருக்கின்றது என்ற உண்மையை அறியாது தலைதடுமாற்றம் கொண்டு தாங்களே இந்திரபட்டத்து வாழ்வோர் என எண்ணுகிறார்கள் சிலர். அந்தோ! அவர்கள் அறியாமை இருந்தவாறென்னே! யானையின்

பிடரி விளக்கம் உற, அதன்மேல் ஆரோகணித்து, சந்திரவட்டக் குடைநிழலில் இருந்து, ரதகஜதுரகபதாதிகள் என்னும் நால்வகைச் சேனைகட்கும் தலைவராய், உலாவப்போன அரசர்களும், தாம் இன்புறுதற்குக் காரணமாய நல்வினை நீங்கப்பெறின் என்னாவர்? அவ்வினையின் வேறுபட்டதாம் தீவினை என்பது வந்து வருத்த, அதனால் தாம் முன்னின்ற நிலைமையின் மாறுபட்டு, பரம தரித்திராய், தாம் அக்கினி சாக்ஷியாக வரித்தமனையாளைப் பகைவர் கைக்கொள்ள நிலைகுலைந்து, சீரழிந்து, மிக இழிந்து, மனநொந்துபோவர். இதனால் நிலையற்றது செல்வம் என்பதை நாம் அறிகிறோம் அல்லவா? இந்த நிலையற்ற பொருளைப்பெற்ற நாம், ஏன் அதைக்கொண்டு, நிலையுள்ளதாகிய பொருளைத் தேடிக்கொள்ளக்கூடாது.

நாளை செய்தாற்போகிறது, இன்றென்ன அவசரம் என்று சிலர் இருப்பர். நாம் நாளைவரை உயிருடன் இருப்போம் என்பது என்ன நிச்சயம்? கடவுள் நமக்கென வாழநியமித்தநாட்கள் செல்லச் செல்ல, நம்முடைய ஆயுள்குறைகிறதே! குறைகிறதே! ஆயுள் குறைதலால், நம்மைப்பற்றி இழுக்கவே இயமன் எதிர்பார்த்திருக்கிறானே! எதிர்பார்த்திருக்கிறானே! அவன்வந்து நம்மையழைக்கும்போது, 'நான் இதுவரை ஒரு தருமமும் செய்யவில்லை. சிறிது என்பொருளைக்கொண்டு தருமஞ்செய்து வந்துவிடுகிறேன். சிறிதுநேரம் பொறுங்கள்' என்று வேண்டிக்கொள்ளின், அவன் நம்மைவிடுவானா? அல்லது 'நான் அளவற்றபொருளைச் சேர்த்துவைத்திருக்கிறேன். அதில் வேண்டுமானால், உமக்குப்பாதி கொடுத்துவிடுகிறேன். என்னைச் சிறிதுநேரம் விடும்' என்றுசொன்னாற்றான் விடுவானா? விடாது பற்றிச்செல்வனே! அவன் வருங்காலத்தை நாம் அறியவும் முடியாதே. ஆதலால் அவன் நம்மைவந்து பற்றுதற்குமுன், நாம் நம்மாலியன்ற நற்காரியங்களைச் செய்துகொள்ள வேண்டும். நிலைபெற்றுள்ளன! நிலைபெற்றுள்ளன என்று நாம் எண்ணி ஏமாறும்பொருள், நிலையற்றதெனத்தெரிந்து, நம்மால் இயன்றனவாகிய தருமங்களைச் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் உதித்தால், அக்கணத்தேயே அவற்றைச் செய்துமுடிக்கவேண்டும்.

நாம் பரமன் அருளால் பொருள்கிடைக்கப்பெறின், அதனை இரப்போர்க்குக் கொடாமல் வைத்தனுபவித்தல் கூடாது. "இது நமக்

குப் பிற்காலமாகிய மூப்புத்தசையில் உதவியாகும். ஆதலின், இதனை இறுகப்பிடித்துப் பிறர்க்குபயோகம் செய்யாதிருக்க வேண்டும்'' என்று எண்ணுவோன் மக்கட்பதடியாவன். யாவன் ஒருவன், தான் கஷ்டப்பட்டுத் தேடியபொருளை, கிடைத்த அந்தக் காலத்திலேயே 'இது நமக்குப்பிற்காலத்துப் பயனுதவுமே' என்ற எண்ணமின்றி, இரப்போர்க்குக்கொடுத் துதவுகிறானோ, அவனே, நடுநிலைமையுள்ள எமன், பற்றிப் பாசத்தாற் கட்டிச்செல்லும் வழிக்கண்ணுள்ள பாலைவனத்தினின்றும் தப்பிப்பிழைத்து, மேலாம் உறுதியை அடைபவன் ஆவன். மற்றவர் இயமன்செய்யும் துயர்க்குள்ளானவரே.

இயமன் கைப்படாமல் தப்பிப்பிழைக்க முடியாதா என்று சிலர் எண்ணலாம். அது முடியவே முடியாதகாரியம். அந்த இயமன் கைப்படாது உய்ந்துபோனோர் இவ்வுலகத்தொருவரும் இல்லை. நமக்கு ஈசன் நியமித்த வாழ்நாட்கள் தம் அளவில் தவறி நீடியா. எத்துணை காலம் ஈசன் நம்மை வாழவேண்டி விதித்தானோ, அத்துணை காலந்தான் நாம் இவ்வுலகில் உயிர்வாழ்வோம். அக்காலத்துக்குமேல், ஓர் கணமேனும், நம்முயிர் உடலிற்றங்காது, அந்த நாள் வந்ததும், அதை அறிந்த இயமன் நமதுயிரைக் கொண்டுசெல்ல வந்துவிடுகிறான் அவனை நாம் வஞ்சிக்கமுடியாது. அவன்கைப்படாது தப்பித்துக்கொள்ளவுமுடியாது. அப்படித் தப்பிப் பிழைத்தவர் ஒருவரும் இவ்வுலகில் இல்லை. அத்தகைய நாம் பெரும்பொருளை வைத்திருப்பதால் என்ன பிரயோஜனம்? நாளை சாப்பறையைப் பறையர் ஒலிக்க, 'தழீஇய' 'தழீஇம்' என்ற ஓசையுண்டாகும். ஆதலால், பொருளுடையோராகிய நாம், இரப்போர்க்கு ஏற்றபடி கொடுத்து இன்பமடைய எண்ணவேண்டும்.

"இயமன் நம்முடைய வாழ்நாளை எப்படிக் கணக்கிடுவான்? நமக்கு ஈசன் நியமித்த வாழ்நாளின் அளவு அவனுக்கு எப்படித் தெரியவரும்". என்று நாம் எண்ணலாகாது. அவன் தோன்றுதல் அமைந்த சூரியனை அளக்கும் கருவியாகக்கொண்டு, நம்முடைய வாழ்நாட்களைத்தினமும் அளந்து சாப்பிடுகிறான். அவன்வருங்கால் நாம் ஒன்றும் செய்யமுடியாது. நாம் பிறந்ததன்பயன், இனிப்பிறவாதநெறி அடைதற்கல்லவா? நாம் இனிப்பிறவாத நெறியை அடையுமார்க்கத்தைப்பெற முயலோமாயின், நாம் பிறந்தும் பிறவாதவர்

கள் அன்றோ? நம்மைப்பிறவாதவரின் கூட்டத்திலன்றோ வைத்து எண்ணவேண்டி வருகிறது? அந்தோ! நாம்பிறந்தும் பிறவாதார் கூட்டத்திற் சேர்த்தெண்ணும் தகுதியைப் பெறுதல் நன்றோ! வீணில் எமன் கைப்படுதல் எற்றுக்கோ! அவற்றின் நீங்கி நாம்உய்தலைப் பெறவேண்டுமாயின், பிறவுயிர்களிடத்து மிக்கஇரக்கம் உடையவர்களாய் இருக்க வேண்டும். இதுவேநாம் உய்ந்துபோதற்கு, உன்னதவழி.

'புண்ணியத்தை யார்கண்டது, பாபத்தைபார்கண்டது? இவை எல்லாம் பித்தம்பிடித்துப் பிதற்றுவோர் பேச்சு. இப்போது நாம் செல்வவானாக இருக்கிறோம்; சுகத்தை அநுபவிக்கிறோம்; பிறரைப் பற்றி நாம் கவனிக்கவேண்டியது அனாவசியம்' என்று, சிலர், தாம் அடைந்த செல்வத்தால் ஏற்பட்டசெருக்கால் மருள்கொண்டு உருள்கின்றனர். அறத்தினைப்பொருளல்ல என்று கருதுகின்றனர். தாம் இனிச் செல்லப்போகும் மறுமைக்கதியை எண்ணுது மாள்கின்றனர். பாவத்தை ஆள்கின்றனர். அந்தோ! அன்னவர் பொருள்பெற்றும், அதனால் ஆம் பெரும்பயனை அடையப் பெறாத அறிவிலிகள் ஆகின்றனரே! அத்தகையார் கையுள்ளபொருளும் பொருளா? அது, கரிய மேகம் வெளிப்படுத்திய மின்னலைப்போன்று, இருந்த இடமும் தெரியாது அழிந்துவிடும் தன்மைத் தென்பதை, அவர்கள் எண்ணவில்லையே.

'அத்தகையார், தாம் சம்பாதித்தபொருளை, பூதம்போலக் காப்பதால் யாது பிரயோஜனத்தை அடைவரோ! இவர்களை அன்றோ பொன்காக்கும் பூதங்கள் என்று நூல்கள் புகல்வது? தாமும் வயிறார உண்பதில்லை. தமக்கென ஏற்பட்ட மதிப்பை நிலைபெறச் செய்வதில்லை. மேன்மேலும் வளரும் புகழைத் தேடிக்கொள்வதில்லை. பெறுதற் கருமையான சுற்றத்தாருக் கேற்பட்ட துன்பத்தைத நீக்குதல் இல்லை. இரப்பார்க்கும் கொடுத்தல் இல்லை. இப்படி அவர்கள் இருப்பார்களாயின், அவர்கள் கஷ்டப்பட்டுப் பொருளைச் சம்பாதித்ததுதான் எதற்கு? பயனின்றி, அதனைக் காத்திருப்பதற் காகவா அதனைக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது? பொருளைப் படைத்தும், அப்பொருளால் அடையும்பயனை அடையாதவான்றோ அவர்கள். ஆதலால், அத்தகையாரை நாம் பொருளை இழந்தார் என்றே சொல்லவேண்டும்.

முற்கூறியபடி, பொருளை இழந்தார் என்று சொல்லப்படுபவரே உலோபிகள் என்று சொல்லப்படுவர். அவர்கள் நல்ல உடைகளை உடுத்திக்கொள்ளார். நல்ல உணவை உட்கொள்ளார். இப்படி யிருந்து, பூர்வஜன்மங்களிற்செய்த நல்வினையின் பகுதியால் தங்கட்குக் கிடைத்த வுடம்பைத்தாமே வருத்துவர். அழியாதசிறந்த தருமங்களைச்செய்யார், இரப்போர்கட்குக்கொடார். இன்னும், தாம்பொருள்மேல், வைத்த ஆசையின் மிகுதியால், மேலுமேலும் அதனையேதேடுவர். கடைசியில் இழப்பர். செத்தபோது, அப்பொருள் அவர்களுடன் போதல்தான் இல்லையே, இழக்காதென்செய்வர்? ஆதலால் அவர்கள் அப்பொருளை இருக்கும் போதே இழந்தவர் என்றேசொல்லவேண்டும். அதற்கு, மலர்களில் உள்ளதேனை, அரிதிற்சிறிது சிறிதாகக்கொண்டு வந்து தான் அனுபவியாது, கூட்டில்வைத்து, கொள்ளைக்கிடந்தரும் தேனீயே சாக்ஷியாகும். ஏனோ, அரிதிற்றேடியபொருளை அவலமாக்கவேண்டும். ஆகையால், நாம் அவ்வுலோபிகளைப்போல இருத்தலாகாது. நாம் பொருள் கிடைக்கப்பெற்றவக்கணமுதற் கொண்டு, சிறிதேனும் தாமதம் செய்யாது, அறத்தின் வழியே அதனைச் செலவிடவேண்டும். அப்படிச்செய்வதனால் நாம் அளவிலா ஆனந்தத்தில் ஆழ்ந்திருப்போம் என்பது சத்தியம்.

புகழேந்தி.

புலவரின் காலம்: 1100—1160.

நாம் புகழேந்தியின் சீரிய சரித்திரத்தை யுடுருவிப் பார்ப்பதற்குமுன், அப்புலவர் வாழ்ந்தகாலத்தை அறிந்துகொளல் அத்தியாவசியம். அதனை யறிந்தாலன்றி அக்காலத்துத் தமிழின் நிலைமையையும், அதனை நம்புலவர் பெருமான் எவ்வாறு உயர்த்தினர் என்பதையும் அறிய இயலாது. ஆகவே, நாம் இங்கு, அவர் வாழ்ந்திருந்த காலத்தை ஆராய்வாம்.

பண்டை நாட் புலவர்களைப்பற்றி யாதாயினும் அறியவேண்டுமானல், அவருடன் நிலவிய புலவர்கள், குறுநில மன்னர், பெருநில மன்னர் முதலியோரை அறிந்துகொண்டு அப்புலவர்கள் பாடிய பாக்களினுதாரவினாலும், அம்மன்னர் பெற்றபாக்களின் ஆதாரவினாலுமே ஆராய்ச்சிசெய்தல் வேண்டும். ஆகவே, இங்குப் புகழேந்தியாருடன் வதிந்த புலவர்கள் இன்னார் என்பதனையும், மன்னர் இன்னாரெ

ன்பதனையும் அறிந்து, பிறகு அவர் காலத்தை ஒருவா றறிந்துகொண்டு இக்கஷ்ட சாத்தியமான வேலையை ஒருவாறு முடித்துப் பின் அவர் சரித்திரத்தினை ஆராய்வாம்.

புலவர்கள் :—

நூலார் கலைவல்ல செம்பியன் கேட்ப நொடிந்துமிக்க
கோலா கலனொட்டக் கூத்தனை யன்றுதற் கோலியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே.

என வருந்தொண்டை மண்டலச்சதகச் செய்யுளாலும், மற்றும் பல நூற்களாலும் இவர்க்கும் ஒட்டக்கூத்தருக்கும் வாதம் நிகழ்ந்திருந்ததாகத் தெரிகின்றமையால், அவ்விருவரும் ஒரேகாலத்தவர் என்பது போதரும். இராமாயண உத்தரகாண்டத்தைக் கம்பர் காலத்திலேயே ஒட்டக்கூத்தர் பாடினர் என்பது உலகப் பிரசித்தமன்றோ? அன்றியும்,

பூணிலாவுங் கம்பனலம் பொலியுந்தமிழாற் புகழெய்திக்
காணுமாறு காண்டமுறுங் கதையிற்பெரிய கதையென்னுந்
தாணிலாவுங் கழலபயன் சபையிற்பயிலுத் தரகாண்டம்
வாணிதாச னரங்கேற்ற வைத்தார்சோழ மண்டலமே.

என 'இக்கூற்றினை நிலைநிறுத்திச் சோழமண்டல சதகம் முழங்கா நிற்கும். ஆகவே, கம்பரும் இக்காலத்தவர் என்பது தேற்றம். ஒட்டக்கூத்தர்க்கும், ஔவையார்க்கும், சில வாக்குவாதங்கள் நிகழ்ந்தனவாகச் சோழமண்டலசதக முதலான நூற்கள் கூறுகின்றமையால் ஔவையாரும் இக்காலத்தில் உயிர்த்திருத்தல்வேண்டும். ஔவையார் வரவே இவர்கள் சங்ககாலத்தில் இருந்தனரெனக்கொள்ளவேண்டும். இதைப் பின்னர் ஆராய்வாம்.

தமிழ் நாவலர் சரிதையுள் 'ஒட்டக்கூத்தர் உலாப்பாடியபோது, போசிரியர் நேமிநாதர் பட்டோலைப் பிடிக்கப்பாடியது' எனுந்தலைப்புடன்,

'செங்கான் முடவன்னம்படர் தீயாமென வெருவிச்
சிறையிற்பெடை மறையக்கொடு திரியத்திரள் கமுகின்

பைங்காண்மா கதமீது படர்ந்தேறி நறுந்தண்
பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா
தங்காதலி யருமைந்தரு முடனாக வணங்கித்
தலைநாவெம தடல்காவெம துயிர்கா அக ளங்கா
கொங்காமன துங்காவென மனுவேசர் வணங்கும்
கொல்யானை யபங்காவிவள் குழலோசை பொறாளே.'

என்ற பாடல் காணப்படுகின்றது. இத்தலைப்பால் பேராசிரியரும், நேமிநாதரும், இக்காலத்தவர் என்பது போதரும். இவர்கள் தொல்காப்பியம் முதலான நூற்களுக்கு உரைகண்ட பேராசிரியரும், சின்னூல் வகுத்த நேமிநாதரும் போலும்.

மன்னர் :—

ஒட்டக்கூத்தரிடம் கல்விபயின்ற சோழன் ஒருவன் சிம்மாசனம் ஏறியபோது ஒட்டக்கூத்தர் அவனைப் புகழ்ந்து,

'ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெலாம்
நீடுங் குடையிற் றரித்த பிரானென்று நித்தலவம்'

என்ற இரண்டடிகளைப்பாடி முடிக்குமுன், அச்சோழன்.

'பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேயென்னைச் சொல்லுலகே'

என்ற ஈற்றிரண்டு அடிகளையும் பாடிமுடித்தனன். இதனால் குலோத்துங்கனென்பவன் இவர் காலத்திருந்தனன் ஆதல் வேண்டும்.

இப்புலவர்கள் குலோத்துங்கன் எனும் பெயரேயன்றி வேறு சில சோழர் பெயர்களையும் வழங்குகின்றார்கள்.

அவை வருமாறு:—'தூபங்கமழ்' என்றபாடலுள் விக்கிரமன் என்பதும், 'இழையொன்றிரண்டு' என்பதுள் மானபரன், கண்டன் என்பவும் 'நானே யினி' என்பதுள் செம்பியன் குலோத்துங்கன் என்பனவும், முற்கூறிய 'செங்கால்' எனும் பாடலுள் 'மனதுங்கா' 'அகளங்க' என்பவும், ''இந்தவிருது யாருக்கென்றபோது கூத்தர்பாடியது'' என்ற தலைப்பின்கீழ் உள்ள 'பத்துக்கொண்டன'என்னும் பாடலுள் மானுபரணன் என்பதும் 'இராசாலகைகொடுத்தபோது கூத்தர்

பாடியது' எனுந் தலைப்பின்கீழ்க்கண்ட 'கொலையைத்தடவிய' என்ற செய்யுளுள் சயதுங்கன் என்பதுங் காணப்படுகின்றன. 'முற்கூறிய பூணிலாவும்' எனும் பாடலுள் அபயன் என்பதும் ஈட்டி எழுபதுள்,

முத்தமிழி ராச ராசேந்த்ரன் முன்னமே
சுத்த வீரத்திறந்து லங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ் பெறுதென
மெய்த்தலை கொடுத்தன வீரக்குந்தமே.

என்ற செய்யுளில் இராசராஜேந்திரன் எனும் பெயருங் காணப்படுகின்றது.

மேற்கூறியவற்றுள், மானபரன், மானுபரணன், கண்டன், அகளங்கன், செம்பியன் என்பன எல்லாச் சோழர்க்கும் பொதுப்பெயர். துங்கன், சயதுங்கன், மனதுங்கன் என்பன குலோத்துங்கன் எனும் பெயரின் சுருக்கமே. நின்றபெயர்கள் விக்ரமன், அபயன், குலோத்துங்கன்,இராசராஜேந்திரன் எனபவை. அபயன் என்பது கலிங்கம்வென்ற குலோத்துங்கன் முதலாவான் பெயர். ஆகவே அபயன் என்பதனையும் குலோத்துங்கன் எனு மபிதானத்தின் பாலடக்கி மற்றையனவற்றைக் கொண்டு ஆராய்வோம்.

குலோத்துங்கன் எனும்பெயர் பலர்க்கும் வழங்கிவந்துளது.ஒருவன் ஆதித்த சோழன் மகன் சங்கிராம ராகவன், வீர நாராயணன் எனப் பல பெயர்பூண்ட குலோத்துங்கன். மற்றையோன் கங்கைகொண்ட சோழன் மகள் மகனும் சளுக்குவேந்தன் விண்டுவார்த்தனன் மகனுமாம் உபயகுலோத்தமன். இவன் அபயன் குலோத்துங்கன். எனும் பெயருடன் விளங்கியவனுவன். வேறொருவன் மேற்கூறியோன் பேரனும் விக்ரமன் மகனுமாம் குலோத்துங்கன். மற்றொருவன், குமாரகுலோத் துங்கன் கோவையுள்,

'சங்கமராச குலோத்துங்கச் சோழன்
கோனுகுஞ் சங்கான்முன் னோன்குலோத்துங்கன்

எனச் சிறப்பிக்கோதப்பட்ட அப்பாட்டுடைத் தலைவன். இவனே சங்கர சோழனுலாவில்,

'பைத்த பொருபுலியைப் பல்கோடி வேந்தணிய
வைத்த குமாரமகீதரந்தும்—மெய்த்துணையாய்த்

தோன்றிய சங்கராசன் சுரராசன்.

குமாரமகீதரன் எனப்படுபவன்.

இங்குச்சம்பந்தப்பட்ட குலோத்துங்கனை அபயன் எனவும் வழங்குதலான் குலோத்துங்கன் I. எனக்கொள்வாம். விக்கிரமனென்பான் இவன் பிள்ளை. இராசராசேந்திரன் விக்கிரமன் பேரனும் குலோத்துங்கன் II. புதல்வனுமாவன். ஆகவே, இடையே பாடப்படாதுவிடப்பட்டான் குலோத்துங்கன் II. என்பது போதரும். அன்றி, குலோத்துங்கன் என்பதற்கு குலோத்துங்கன் II. என்பவனைக்கொண்டு அபயன் என்பதற்குக் குலோத்துங்கன் I. எனக்கோடலுமியலும். அவ்வாறெனில் இவர்கள் நால்வர் பெயரும் பயில் தரும்பாக்களுடையர் ஆகிய ஒட்டக்கூத்தர் இவர்கள் நால்வர் அரசாண்டகால முழுது மிருந்தனராதல் வேண்டும்.

அபயன்	கிபி	1070	முதல்	1118	வரை
விக்கிரமன்	,,	1118	,,	1132	,,
குலோத்துங்கன்	,,	1132	,,	1162	,,
இராசராசேந்திரன்		1162	,,	1200	,,

அஃதாவது அவர் 1070 முதல் 1200 வரை உயிர்த்திருந்தனராதல் வேண்டும், அஃதியலாதன்றோ?

பின் எவ்வாறு கொள்வது? குலோத்துங்கன் என்பதற்கு ஆதித்தன் மகனையாவது குமாரமகிதரனையாவது கொளலாமோ எனின், அவ்வாறுகொளின் விக்கிரமன் இராசராசேந்திரன் என்பவர்கள் இவர்கள் அரசாட்சிக்குமுன்போ பின்போ வாராமையால் இயலாதென்க. மற்று அபயனுக்கும் இராசராசேந்திரன் எனும்பட்ட மூண்மையின் இவர்கள் அபயன்காலத்தும் விக்கிரமன் காலத்து மிருந்தனர் எனக்கொள்ளின் என்னையோவெனின், பின் வருவன வற்றான் அஃது நிலையற்றுப் போதலுணர்க.

தொடரும்.

உதவி பத்திராதியர்.

பிரகலாதன்.

ஒரு இனிய தமிழ் நாடகம் விலை அணா 8.

பாரதி ஆபீஸ், சென்னை.

தன்னுயிரைப்போல் மன்னுயிரை எண்.

தன்னுயிரை நேசியாதார் உலகில் ஒருவரும் இரார். கேவல மானமிருகம், பக்ஷி, மீன்முதலியனவும் தம்முயிரைப் பாதுகாத்தலின்கண் மிக்க கவனம் செலுத்துகின்றன. உலகில் எவன்தான் தன்னுயிரிற் பிரியம்வையாதவன்? எவைதான் பிரியம்வையாதவை? ஆதலால், உலகிற்பிறந்த ஒவ்வொரு பிராணியும் தத்தம் உயிரில் மிக்க பிரியம் வைத்துள்ளது என்பது அனுபவசித்தமாம். அது போலமானுடமக்களும் ஆம் என்பது சொல்லாமலே விளங்கும்.

மானுடமக்கள் யாண்டுந்தம் முயிர்க்கண் பிரியம் வைத்திருப்பதாகத் தெரிகிறது? அவரவர்கள் பொன்னிடத்தும் பெண்ணிடத்தும் மண்ணிடத்தும் மக்களிடத்தும் தம்பிரியத்தைக்காட்டக் காண்கின்றோமே யன்றித் தம் முயிரிடத்திற் பிரியங்காட்டக் கண்டோம் இல்லை என்று சிலர் சொல்லினும் சொல்வர். அதைச்சிறிது நாம் விசாரிப்பாம். அவர்கள் பொன்முதலான பொருள்களிடத்திற் றம் பிரியத்தைக்காட்டுவ தெதுபற்றி? தம்முயிரின் சார்பானவை அவை, தமக்கு இன்பசாதனமாக உள்ளன அவை, என்று எண்ணி அன்றோ, அவர்கள் அவற்றினிடத்து அதிகபிரியம் உடையவர்களாக இருக்கின்றனர்? இது விஷயத்தில் நாம், அவர்கள் என்று பிரித்துச் சொல்லுவானேன்? இது நம்முடைய சொந்த அனுபவந்தானே? மனைவி முதலானோரிடத்தில் நாம் நம்முடைய பிரியத்தைக் காட்டுவது நம்முடைய நன்மையைக் கோரியேயாம். அவர்கள் நமக்கு இன்பசாதனப் பொருள்களாக இருக்கின்றனர், என்று நாம் எண்ணுதலாலன்றோ, நாம் அவர்களை நேசிக்கிறோம். அவர்பால் நீங்கா அன்பைக்காட்டுகிறோம். அப்படிநாம் காட்டுதற்குக் காரணம் நாம் நம்மிடத்தில் வைத்திருக்கும் பிரீதிகாரணமாக என்று தெரியவில்லையா? இதனால் நம்முடைய உயிரையே நாம் மற்றெவற்றினும் சிறந்ததாக எண்ணி, அதன்பால் அதிகப்பற்று வைத்திருக்கிறோம் என்பது தெரிகிறது. இதனையே ஓர் சிறுகதை முகத்தான் தெரிவிக்கிறேன். இக்கதை உண்மையில் நடந்திராதாயினும். அத்தகைய ஓர் சந்தர்ப்பம் ஏற்படின், அங்ஙனந்தான் ஒருவன் செய்வன் என்பது தெற்றெனத் தெளிவாம்.

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன்தாயார் அவனுக்கு அடுத்த நகரத்துள்ள ஓர் குடியானவனது பெண்ணை விவா

கம் செய்வித்து, தன்குடும்பபாரத்தை அவர்கள் தலையிற்றூக்கிவைத்துத் தான் தாண்டவமாடும் ஆண்டவன் பதத்தை அடைந்தனள். தம்பதிகள் இருவரும் சிலநாள் இல்லறதருமத்திற் சிறிதும் வழாது நடத்திவந்தனர். இங்ஙனம் அவர்கள் இருக்கும் நாளையில், அவர்கள் மனம் களிக்குமாறு ஓர்பிள்ளை பிறந்தது. அப்பிள்ளையை அவர்கள் நாளொருமேனி பொழுதொரு வண்ணமுமாகப் பாராட்டிச் சீராட்டிவந்தனர். அங்ஙனமாக. ஓர் நாள் அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது.

வந்த அக்கடிதத்தைப் பிரித்துப்பார்த்தான் அக்குடியானவன். அது தன் மாமனெழுதியகடிதம் என அறிந்து களிப்புற்றான். சிறுவர்கள் தங்கள் மாமன் மாமிகள் இடத்தில் தந்தைதாயாரிடத்தில் வைத்திருக்கும் பிரியத்தைக் காட்டிலும் அதிகமாக வைத்திருக்கின்றனர் என்பது தற்காலத்திய அனுபவம்தானே. தன்மாமனார் எழுதிய கடிதத்தைக் கண்டதும் அக்குடியானவன் முகம்பரிதியைக் கண்ட தாமரையைப்போல மலர்ந்து விகசிதமாயது. அதற்குள், சமையல் அறையில் வேலைசெய்துகொண்டிருந்த அவன் மனைவியும் அவனிடம் வந்து சேர்ந்தாள்.

குடியானவன்:—பெண்ணே! எங்குவந்தனை உன்வேலையை விட்டு? இங்கொன்றும் விசேஷம் இல்லை; நீ சென்று உன்வேலையைப் பார்.

மனைவி:—சரிதான், தெரிந்து கொண்டேன். தாங்கள் விசேஷம் ஒன்றும் இல்லை என்பதனாலேயே ஏதோ ஓர் விசேஷம் இருக்கிறதெனத் தெரிந்துகொண்டேன். ஆதலால், அந்த விசேஷந்தான் என்ன, எனக்குச்சொல்லுங்கள். அதைச்சொல்லினன்றி, யான்போகேன்.

அப்போது குடியானவன் தன்கரத்து மறைத்துவைத்திருந்த கடிதத்தைக்காட்டி 'இது எங்கிருந்து வந்தது தெரியுமா' என்று கேட்டான். அவள் கற்றறிந்த பொற்றொடியாதலின், 'தெரியும், இது என்தந்தையெழுதிய கடிதம் அதைக்கொடுங்கள். என்ன எழுதி இருக்கிறார் பார்ப்போம்' என்று கேட்க, அவன் அவளிடத்தில் அக்கடிதத்தை நீட்டினன்.

கடிதத்தைப்பெற்ற அப்பெண்மணி அதனைப் பிரித்துப் படிக்குங்கால் அவள் முகமாகிய கண்ணாடி, அவள் மனத்துண்டான சந்தோஷத்தை எடுத்துக்காட்டியது. உடனே அவள் தன் நாயகனைப் பார்த்து, 'நாளைக்கே நாம் புறப்படவேண்டும். இங்குத்தான் நமக்கென்னவேலையிருக்கிறது. வரும்படி எழுதியிருக்கிறபடியால், நாம் அவசியம்போகவேண்டியதே' என்றாள். அதற்குக் குடியானவனும் சம்மதித்தான். மாமியார் வீடுசெல்ல மனக்கசப்படைவார் இக்காலத்து யார்தான் உளர்?

மறுநாள் அவர்கள் குறித்தபடிப் பிராயாணப்பட்டுச் சென்று, மாமியார் வீட்டையடைந்தனர். பலநாள் அங்குத்தங்கி விருந்துண்டு, வேடிக்கையாகக் காலங்கழித்தனர். சிலநாட்சென்றபின் அக்குடியானவனுக்குத் தன்னூரின் ஞாபகம் வந்து விட்டது. உடனே தன் மாமனாரிடத்திற்சென்று விடை பெற்று, தன்மனைவியையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு தன் ஊருக்குப் பிரயாணப்பட்டான்.

சிறிது தூரம் வந்தபின்னர், ஓர் ஆறு அவர்கள் எதிர்ப்பட்டது. அவ்வாறு அக்குடியானவன் ஊருக்கும் மாமியார் ஊருக்கும் இடையில் உள்ளதோர் சிற்றாறு. அவர்கள் முன் மாமியார் வீடு செல்லும்போது, சந்தோஷத்தோடு சென்றார்களாதலால் அந்த சந்தோஷத்தைக் கெடுத்தலாகாதென எண்ணி அவர்களைத் தடைசெய்யாது விட்டது. இப்போதோ பேரவெள்ளம் அதனிடத்திற்பெருகி ஓடுகிறது. கண்டனர் தம்பதிகள். அவ்வாற்றைத் தாண்டிச்செல்லும் உபாயம் எது எனத்தேடினர். ஒன்றும் அவர்கள் மனதிற்படவில்லை. மனைவிமாத்திரம் தன்னுபுகனைப் பார்த்து 'வாருங்கள், மீட்டும் உங்கள் மாமனார் வீட்டுக்குப்போவோம். வெள்ளப்பெருக்குச் சிறிது அடங்கியபின் வேண்டுமானால், திரும்பிவரலாமென்றனள்'. குடியானவன் அதைக்கேட்டு 'சீ, சீ, அப்படிச் செய்யலாமா, மறுபடியும் நான் அங்குச் சென்றால் ஊரிலுள்ளார் என்னைப்பார்த்துப் பரிகசிப்பர். மாமியார் வீட்டை விட்டுப்போகமனம் இல்லையா என்பர். இதை எல்லாம் யார் கேட்பது. வேண்டாம் நாம் போவதே சரி' என்று, தன்மனைவியைத் தன்தோளின் மீதேற்றிக்கொண்டு தன்மாமனார் அளித்தபொருள் மூட்

டையைத் தலையில் வைத்துக்கொண்டு, குழந்தையைக்கரத்திற்றாங்கி, ஆற்றில் இறங்கினன்.

ஆற்றின் ஆழமோ சொல்லமுடியாது. வெள்ளமோ அதிவேகமாக ஓடிவருகிறது. குடியானவன் மிக்க சிரமத்துடன் சிறிதுதூரம் சென்றான். மேலும்செல்ல அவனால் முடியவில்லை. என்ன செய்வான்! மீட்டும் கரைக்குச் செல்லலாம் என்று திரும்பவும் வெள்ளம் இடம் தரவில்லை. ஒன்றும் தோன்றாது உள்ளத்தடுமாற்றங் கொண்டான். சிறிது நேரம் பேசாமல் இருந்தபின், தன் தலையில் உள்ள மூட்டை, ஒருபக்கம் தன்னைக் கீழ் அமிழ்த்துவதையும், கையில் உள்ள குழந்தையும், தோட்கண் உள்ள தன்மனைவியும் தனக்குப் பெரும்பாரமாக இருப்பதையும் அறிந்து, இதற்கென்ன செய்யலாம் என்று யோசித்தான், யோசனை முடிந்ததும் 'இந்தப் பொருளடங்கிய மூட்டையைப் பார்த்தால், நாம் மனைவிமக்களோடு வீடு சேரமுடியாது. நாம் உயிருடன் வீடுசேர்ந்தால், இப்பொருளைப் போல எவ்வளவோபொருள் சம்பாதித்துக் கொள்ளலாம்' என்று தேர்ந்து, அம்மூட்டையினை வெள்ளத்தில் விட்டான். சிறிதுபாரம் குறைந்தது. அதனால், சிறிது முன்னாகச்சென்றான். மீட்டும் மேற் செல்லல்கஷ்டம் என அறிந்து, தன்மனையாளை நோக்கி, 'என்ன செய்வது! இத்தகைய ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டோமே!' என்று கேட்டான். மனைவி என்ன சொல்வாள்; பாவம், வாய்பொத்தி யறிவழிந்துகிடந்தாள். கடைசியில் அவன் தன்கரத்துள்ள குழந்தையைப் பார்த்தழுது 'ஐயோ! உன்னையும் இவ்வெள்ளத்திற் கிரையாக்கவேண்டிய தாயிற்றே' என்று அழுதான். பிறகு ஒருவாறு தேறி 'நாம் வீடுசேர்ந்தால், இதுபோன்ற எத்தனையோ குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இப்போது வேறு ஒன்றையும் யோசித்தலாகாதென எண்ணிக் குழந்தையையும் நீரிற்போட்டு, மேலும் நடந்து சென்றான். ஆற்றின் நடுவில் வந்துவிட்டான். இப்போது அங்கு ஆழம் சொல்லவே முடியாது.' அவனுக்குச் சிறிது நீந்தும் பழக்கம் உண்டாதலால், தன்னாற் கூடியவரை, தன் மனைவியைத் தோளிற் சுமந்து நீந்தினான். மனைவியின் பாரத்தால் மதிகுலைந்தான் மரணம் தனக்கருகாக உள்ளதெனத் துணிந்தான். மனைவியை வெள்ளத்தில் விட்டால் அன்றித் தன்னுயிர் நிலைபெறாதெனத் திட்டமாய் அறிந்தான். திரும்பிப்பார்த்தான் மனைவியை. அகத்தும் கண்ண

கத்தும் கலக்கம் உண்டாயது. வேறுவழியில்லை. என்னசெய்வான்! நாம் உயிருடன் ஊரையடைந்தால், இம்மனையைப் போல எத்தனையோ மனைவிகளை மணந்து வாழலாம் எனத் துணிந்தான்! பின் தன் குழந்தைக்குத் துணையாயிருக்க அவளையுமாற்றில் விட்டுச் சுகமே நதிக்கரைசேர்ந்து ஊரையடைந்து, வேறொரு மாதை மணந்து சுகத்துடன் வாழ்ந்தனன்.

மேற்கூறிய கதையால் நமக்கு எல்லாப்பொருள்களினும் உயிரே மேலானது என்பது தெரிகிறது. இது ஒவ்வொருவருடைய அநுபவமாதலால், இதற்கொருகதையும் அநாவசியமாகும். நாம் எப்படி இன்புடன் வாழவேண்டும் என்று எண்ணுகிறோமோ, அப்படியே அல்லவா மற்றவர்களும் மற்ற உயிர்களும் எண்ணும். அதையறிந்த நாம்பிற உயிர்கட்கு வருத்தத்தைச் செய்வது நல்லதா? நம்முடைய உயிர் நமக்கெப்படி வெல்லமோ, அதுபோல, ஒவ்வொருவருடைய உயிரும் ஒவ்வருக்கும் வெல்லமாயிற்றே. ஆதலால் நாம் ஒருவரையும் வருத்தலாகாது. நம்மைப்போல பிறரையும் கருதவேண்டும். நாம் ஒருவற்குத் தீங்கு செய்யக் கருதுங்காலத்து, நம்மைப்பிறன் இன்புறுத்தின் நமதுமனம் என்ன நிலைமையில் இருக்கும் என்பதை அறிய வேண்டும்.

சுவாமி அங்கமுத்து.

புத்தர் போதித்த தர்மம்.

(பாலியினின்றும் மொழிபெயர்த்தது.)

நம் நிலைமை நம் எண்ணங்களின் உருவமே. நம் எண்ணங்கள் எத்தகையவோ அவ்வாறே நம் நிலைமையுமாம். கெடுநினைவொடும் ஒருவன் ஒழுகினும் பேசினும் வண்டியினுகம்பூண்ட எருதினைச் சகடக்கால் பின்தொடர்வதுபோல் அவனைத் துன்பம் தொடரும். நல்லெண்ணத்துடன் ஒழுகின் அவனுடைய நிழல் அவனை நீங்காது தொடருமாபோல் அவனை இன்பந்தொடரும்.

எவன் "அவன் என்னை 'அடித்தான்' 'இகழ்ந்தான்' 'வென்றான்' 'கொள்ளையிட்டான்'" என்று மனம்நைகிறானோ அவனிடம்பகை எவ்வாறும் குடிகொண்டுவாழும். இவ்வாறு மனதில் எண்ணாதவனிடத்து அப்பகை க்ஷணமும் நில்லாது.

உலகினரில் பலர் தாமெல்லோரும் இவ்வுலகினிலே அழிந்திடு வார் என்பதை அறிந்திலர். இவ்யாக்கை நிலையாமையை உண்மையில் அறிந்தவர்கள் சண்டையிடார்.

காமதுராந்தகன் அளவறிந்து உண்டி அருந்துவதில்லை. ஐம் புலன்களும் அவன் வசமல்ல. தங்கள் தங்கள் வசமே. சோம்பலும், வலியின்மையும் அவனை மேற்கொள்கின்றன. ஆகவே, நன்றாகக் காய்ந்த வலியற்ற மரத்தினைக்காற்று யாதொரு பெருமுயற்சியுமின்றித் தள்ளுமாபோல், பாவம் காமதுராந்தகனைச் சாய்த்து விடும். உலக இன்பங்களை வெறுப்பான் ஐம்புலன்களையும் (ஆமையைப்போல்) அடக்கியாள்வன். ஆகவே, ஊக்கமும் வன்மையும் உடையனுவன். காற்று, கற்பாறையினை அசைக்கவ்வன்மையற் றிருப்பதுபோல பாவமும் இஞ்ஞானியை யாதும் செயற்பாலதன்று.

தன்பாவத்தின் நீங்காதவனும், ஆனமுதலில் அதிகஞ் செலவு செய்வோனும் ஞானிகளாக உரியரல்லர். ஆனல் பாவத்தின் நீங்கிப் புலன்களை அடக்கி, எல்லா நற்குணங்களும் அமையப் பெற்றவன் ஞானி ஆதற்குரியன்.

பகையைப் பகையினுல் வெல்லல் எக்காலத்தும் இயலாது. எனினும், அன்பினுல் அதனை வேரறக் களைதல் எளிது; இஃதோர் முது மொழி.

ஓர் பேனாத்தம்.

ஹரிசிங்.

1—அத்தியாயம்.

ஹரிசிங்.

"என்னே வியப்பு! இருள் அடர்ந்தமாயாந்தகாரத்தில் மூழ்கிக்கிடந்த உயிரை, ஞானசூரியன் சிவஒளிபரப்பி, இருளொழித்து, அவ்வுயிர்க்கு உவகை அளித்தாங்கு, பூதஇருளிற் புதைந்துகிடைந்த மக்களையும் மாக்களையும், செங்கிறப்பரிதி குணதிசைதோன்றி ஊக்கம் ஊட்டியது; என்னே வியப்பு! என்னே வியப்பு! அவன் வரவைக்கண்டதும் அவரவர்தத்தம் வினைவுகொண்டு செல்கின்றனரே! பசுக்களும் அன்றோ, எப்போது தொழுவத்துள்ள தம்மை மேய்ப்போன் வந்து அவிழ்த்துச்செல்வன் என்று எதிர்பார்க்கின்றன! பறவைகளும், உறக்கத்திற்கிடக்கும் மற்றைய பக்ஷிகளை எழுப்புவான் வேண்டி அன்றோ கத்துகின்றன! இத்தகைய வேளையில், மதது ஹரிசிங் என்ன செய்கின்றான், பார்க்கிறேன்—சொல்லவும்வேண்டுமோ? அவன் வழக்கம்போல் காலையுண்டிகொண்டு முடித்து, ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான். அவன் எதிராக உள்ள மேஜையில் தண்ணீர் நிறைந்த வெள்ளிப்பாத்திரம் ஒன்று இருக்கிறது. அதனை அவன் உற்றுப்பார்த்

தவண்ணமே இருக்கின்றனன் எனினும், அவன் அதனைப்பார்த்தவன் அல்லன். நான் அவனைச் சிறிதுநேரம் அவனுக்குப் பின்புறமாகவே நின்று பார்த்துப் பின் என் காலிற் தட்டப்பெற்ற ஓர் கைத்தடியைக் கீழே குனிந்து எடுத்தேன். அழகிய தடி! செம்மரத்தினுற் செய்யப்பெற்றது. கைப்பிடி சித்திரவேலை செய்யப்பெற்ற வெள்ளிப்பூணால்மூடப்பெற்றிருந்தது. இடையே ஓர் வெள்ளித்தகடு பதிக்கப்பட்டு, அதில் ஆயுர்வேத பூஷணம்-"கா. சாம்பசிவ முதலியாருக்கு; 1860ம்வருடம் க - ப - ஆ - நண்பர்கள் அளித்தது" என்று செதுக்கப்பட்டிருந்தது.

"வாச, நீ அந்தத் தடியைப்பார்த்தவண்ணம்நிற்பதன் காரணம் என்ன?" என்று ஹரிசிங் என்பக்கமாகத் திரும்பிப்பாராமலே கேட்டனன். கேட்டதும், யான் பெரிதும் அதிசயம் உற்று,

"ஹரிசிங், நான் இன்னது செய்கிறேன் என்று உனக்கு எப்படி தெரிந்தது? ஒருவேளை உனக்கு முதுகிலும் கண்ணுண்டு என எண்ணுகிறேன்" என்றேன்.

"முதுகில் கண்ணில்லாவிடினும், வாச, என் எதிரா நன்ருய்த் தேய்த்துச் சுத்தம் செய்யப்பெற்று மெருவுடன் இருக்கும் வெள்ளிப்பாத்திரம் இருப்பதை நீ பார்க்கவில்லையா? அஃதிருக்கட்டும், வாச, நீ அந்தத் தடியைப் பற்றி என்ன யோசனை செய்துகொண்டிருந்தாய்! ஏதாவது அதன் வரலாற்றை அறிந்துகொண்டனையா? அவ்வுடைமைக்கு உரியான் யாவன்? சொல் பார்ப்போம்"

"நன்று நீ கேட்பது! நான் உன்னைப்போல் துப்பறிவதில் சிறும் சிறப்பும் உற்றவனு என்ன?"

"இல்லாவிடினும், இத்துணைநாள் என்னுடன் பழகவில்லையா? அன்றியும், சில சமயங்களில், நீ கூறுவன உண்மையாகவே முடிந்திருக்கின்றனவே. ஏதோ, நான் கேட்கட்டும். இத்தடியினை உற்றுநோக்கி, இதன் வரலாற்றை ஒருவாறு சொல்"

நான் ஒரு துப்பறிவோனல்லாவிடினும், துப்பறியுந் துறையிற் கைபோன எனது நண்பன் ஹரிசிங்கோடு கூடிய பழக்கத்தால், பின்வருமாறு கூறலாயினேன்.

"ஹரிசிங்! நான் நினைக்கிறபடி, இந்தச் சதாசிவ முதலியாரென்பவர், மிகவும் கீர்த்திவாய்ந்த வைத்தியராகவும், சிறிது வயது சென்றவராகவும் எவராலும் நன்கு மதிக்கப்பட்டவராகவும், இருத்தல்வேண்டும். இந்தத்தடியை அவருக்கு அவர் பெருமை அறிந்த சிலர் பரிசாகக் கொடுத்திருக்கவேண்டும்" என்று நான் சொல்லி முடித்தற்குமுன் எனது நண்பன் மிகவும் சந்தோஷத்துடன் "வாச! நன்று! நீ கூறியது மிகவும் நன்று! பிறகு?" என,

"பிறகு—இந்த வைத்தியர் நோயாளிகளைப் பார்த்தற்குப் போம்பொழுது பெரும்பாலும் நடந்துசெல்வாரென்றே நினைக்கின்றேன். இன்னும், இவருக்குக்கிராமாந்தரங்களிலேயே பிழைப்பதிகம்போலும்" என்றேன்நான்.

'என் அப்படி?'

"ஏனெனின், இத்தடியில் எத்தனைக்காயங்கள் பட்டிருக்கின்றனபார். மூனையிற்பதித்த கனத்த இருப்புப்பூண் இவ்வளவு தேய்ந்துவிட்டதே. இத்தகைய தடியினைப் பட்டணத்து வைத்தியன் கொண்டுபோவானு?"

"அப்புறம்"

"அப்புறம் என்ன இன்னும்? ஓ! ஆம், க - ப - அ. நண்பர்கள் இருக்கிறார்களோ?—ஹாரிசிங்! இதைப்பற்றி எனக்கொன்றுந் தெரியவில்லை"

"தெரியாமற்போனுற் போகிறது. இவ்வளவு சொல்லியதேபோதும். வாசு! நீ உண்மையிற் சில விஷயங்களில் என்னைத் தோற்கடிக்கிறாய். கூடியவிரைவில் நீயும் ஒரு பெருந்துப்பறிவோனுவாய். நீ இவ்வளவு யூகித்து விஷயங்களை விளக்க உரைப்பாய் என்று இதுவரையிலும் எண்ணவில்லை. இன்றுதான் உன் திறமையைக் கண்டேன் என்றான் ஹாரிசிங்.

இதற்குமுன் அவன், என்னை இங்ஙனம் புகழ்ந்ததே இல்லை. அவன் என்னை இன்று இங்ஙனம் கூறவே எனக்கு என்றுமில்லாத ஆனந்தம் உண்டாய்விட்டது. இத்தகைய பெயர் எப்போதுவரும், எப்போதுவரும் என எதிர்பார்த்திருந்த எனக்கு, ஹாரிசிங்கின் தொழிலில் அனேகமாய்த் தேர்ந்துவிட்டோம் என்ற கெர்வமும் உண்டாய்விட்டது. சிறிது நேரத்திற்குப்பின் ஹாரிசிங் எனது கரத்திலிருந்த தடியை வாங்கி, அதனை ஒரு நிமிஷம்வரையிற் பிற கருவிகளின் உதவியில்லாமலே தன் கண்களால் உற்றுப்பார்த்தான். அப்போது, அவனுடைய முகத்தில் ஒருவிதமான மலர்ச்சி யுண்டாயது. உடனே அவன் ஒரு பூதகண்ணுடிகொண்டு வெளிச்சத்திற்காகப் பல கணியின் அருகே சென்று பரீக்ஷித்துப்பாத்தான்.

"கவனிக்கத்தக்க விஷயமே-ஆனாலும் அவ்வளவு பெரிதல்ல" என்று சொல்லிக்கொண்டே மற்றொருபுறமாய்ப்போய் இந்தத்தடியில் இரண்டொரு சாதனமே உள்ளது. அதைக்கொண்டுதான் நமது கோட்டையைக் கட்டவேண்டும்" என்றான் ஹாரிசிங்.

"ஹாரிசிங், நான் ஏதாவது விட்டுவிட்டேனு என்ன? நான் எல்லாவற்றையும் சரியாய்ச் சொல்லினேன் என்றே எண்ணுகிறேன்" என்று அதிக ஆவலுடன் கேட்டேன்.

'நான் என்ன என்று சொல்வேன்? வாசு! உண்மையைச் சொல்லவும் எனக்கு நாஎழவில்லை-நீகூறியன அநேகமாய்ப்பொருத்தமாய் இல்லையே நீ சொல்லிவந்தபோது எல்லாம் உண்மையென்றே எண்ணினேன். ஆயினும் நீ கூறியன யாவும் பொய்த்துப்போகவில்லை. நீ கூறியபடி அம்மனிதன் கிராமாந்தரங்களில் வைத்தியம் செய்பவனே. அன்றியும் அவன் காலாலேயே நடந்து செல்கிறான்."

"அப்படியானுல் யான் கூறியன உண்மையே"

"ஆம் அவ்வளவு வரையில்"

"அவ்வளவுதானே யானுங் கூறியது"

"அல்ல, அல்ல, வாசு! அதனைப் பின்னர் தெரிவிக்கின்றேன். இந்தத் தடி க. ப. ஆ. நண்பர்களால் கொடுக்கப்பட்டது" என்று இருக்கிறதே

இது என்ன தெரியுமா? கன்னிகா பரமேஸ்வரி அவுஷதசாலை நண்பர்கள் கொடுத்ததென எண்ணுகிறேன்.

"உண்மையாய் இருக்கலாம்"

"இருக்கலாம் என்பதைக் கொண்டுதான், நாம் இல்லாத சமயத்தில் நம்மிடத்தில் வந்துபோன மனிதனை இன்னான் என அறியவேண்டும்"

"அப்படியா? சரி, க. ப. அ. என்பதைக் கன்னிகா பரமேஸ்வரி அவுஷதசாலை என்றே வைத்துக்கொள்வோம். அதனுல் நாம் என்ன இன்னும் அறியக்கூடும்?"

"அதையுமா ஒருவர் சொல்லவேண்டும். நான் இது விஷயமாய்ச் செய்யும் வழிகளை நீ அறிவையன்றோ? அவற்றின்படி யோசித்துப்பார்"

"என் யோசனைக்கு ஒன்றும் எட்டவில்லை. ஆனுல் ஒன்றுமாத்திரம் சொல்வேன். இம்மனிதன் கிராமாந்தரங்களில் போய் வைத்தியம் செய்வதற்கு முன்னம் பட்டணத்திலேயே வைத்தியனுக விருந்தான் எனத் தெரிகின்றது."

"இதை விட நாம் அதிகமாய்க் கண்டுபிடிக்கலாம் என்று எண்ணுகின்றேன், நான். இதோ, இதனை இந்த வெளிச்சத்தில் பார். இத்தகைய பரிசு அவனுடைய நண்பர்களால் எந்தச்சமயத்தில் கொடுத்திருக்கப்படவேண்டும்? என்ன, பேசாம லிருக்கின்றாய் வாசு? அநேகமாய் இந்தச் சதாசிவமுதலியார் அவுஷதசாலை உத்தியோகத்தை விட்டுப் பிரிந்தகாலமாய்த்தான் இருக்கவேண்டும். என்வாசு? அத்தடி அவருக்கு பரிசாகக் கொடுக்கப்பட்டது என்பது நமக்கு நன்றாகத்தெரியும். பட்டணத்தைவிட்டு நாட்டுப்புறங்களிற் சென்று முதலியார் வைத்தியம் செய்கிறார் என்பது வெளிப்படைமலே. ஆகவே அவர் வேலையை விட்டுப் பிரிந்தகாலத்திற்றான் இப்பரிசு அவர் நண்பர்களால் கொடுக்கப்பட்டது என்று அறிந்துகொள்வது அசாத்தியம். (தொடரும்.)

பலதிரட்டு.

திமிங்கலம் என்னும் மீன் 10,000 மணங்கு பளுவிருக்கும். அதாவது சுமார் 1000 யானையின் பாரம். அதன் நீளம் 70 அடியிருக்கும்.

மஞ்சாகுப்பம் ஜில்லா விருத்தாசலம் தாலுகா பெண்ணாடம் கிராமத்தில் 31-8-16ல் ஒரு பெண்ணுக்கு ஆண்குழந்தை பிறந்தது. அதற்குத் தலை 2, காது 4. கண்மூக்கு 2, வாய் 2, கால், உடல் 1 மற்ற அவயவங்கள் இருந்தன. குழந்தை பிறந்து 2-மணி 13 நிமிஷமிருந்து இறந்துபோய்விட்டது.

ஜெர்மனியர் அரண்களிலிருந்து ஓடும்போது ஒருவகையான ஆமைபோல வெடியைச்செய்து சுவர்களில் வைத்துச் செல்கிறார்களாம். இது தொட்டவுடன் வெடிக்கும். புது பட்டாளம்போய் நுழைந்து இதை ஆமைக்குஞ்சு என்று நினைத்துக் கையாலெடுத்ததும் உடனே தொட்டுக்கிளம்பி அனேமோசஞ் செய்துவிடுகின்றதாம்.

K. KANNIAPPA ACHARY & SONS.

PRINTERS, PUBLISHERS,
BOOK-SELLERS,
AND COMMISSION AGENTS.

Chintadripet, Madras.

கொ. கன்னியப்ப ஆச்சாரி
அண்டு சன்ஸ்

பிரின்டர், பப்ளிஷர், புக்செல்லர்,
அண்டு கமிஷன் ஏஜண்டு.

அன்பர்களே!

இக்கம்பெனியின் ஆதரவால் சில பொதுக் காரியங்களை நடத்தி வரவும், இன்னும் பல அரிய பெரிய காரியங்களைச் செய்து முடிக்கவும் நாமிதனை 1909-ஷு த்தில் ஸ்தாபித்து விர்த்திசெய்து வருகிறோமே யல்லது, உலகத்தவர்களை மோசஞ்செய்து பொருள் சம்பாதித்து வயற்றை வளர்க்க ஏற்படுத்தியதல்ல. ஆனதால், இவ்விதக் கம்பெனியை ஒவ்வொரு சகோதரர்களும் நன்கு கவனித்து தங்களாலியன்றவரையில் தேகப்பிரயாசையும், வாக்கு சகாயமும், பொருளுதவியுஞ் செய்து இக்கம்பெனியை விர்த்திசெய்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

விஸ்வகுலோத்தாரண பிரஸ்,

நெ. 5/10, வேதகிரி மேஸ்திரி வீதி,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

1916.

அமெரிக்காவின் நியூயார்க் பட்டணத்திலுள்ள எலெக்ட்ரிக் கம்பெனியார் அமெரிக்காவின் கடற்படைகளுக்காக ஓர் மெத்தப் பிரகாசமான தேடு தனி விளக்கை செய்திருக்கின்றனராம். அதின் வெளிச்சம் 200 மைல் தூரத்திலுள்ள காக்ஷிகளை மிகவும் தெளிவாய்க் காட்டக்கூடியவையாம்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் கவர்ன்மெண்டார் ஓர் நூதனமான துப்பாக்கி செய்திருக்கின்றனராம்- அவைகள் துப்பாக்கியில் போட்டுச்சுடும் தோட்டாக்களா யிருந்தபோதிலும்சுடுவது வெறும் புகையாம். அந்தப்புகையானது ஜர்மானியர்களின் விஷக்காற்றைப்போலல்ல. ஆனால் அதால் சுடுபட்டவனுக்குக் கொஞ்சநேரம் வரையில் கண்தெரியாமல் மூர்ச்சைப்பட்டுக் கீழே விழுந்து விடுவானும்.

யுத்தங்காரணமாக ஜெர்மனியின் வியாபாரங் குன்றிப்போயின. ஜெர்மனியில் சென்ற வருஷக் கடைசிவரையில் 30-கோடி பவுண்டு மதிப்புள்ள சாமான்கள் சேர்த்துவைக்கப்பட் டிருக்கின்றனவாம். இன்னும் இரண்டு வருஷம் யுத்தம் நடைபெறுமாயின் அங்கு 100-கோடி பவுண்டு மதிப்புள்ள சாமான்கள் சேர்ந்துவிடுமாம். அச்சாமான்களை யுத்தம் முடிந்தபின் மிக்க குறைந்த விலைக்கு விற்க ஜெர்மனியர்யோசித்து வருகின்றனர்.

ஐரோப்பியயுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள தேசங்களின் தொகை 15. அதில் நேசக்கட்சியின் தொகை 11 ஆகும். இன்னின்ன காலத்தில் ஒவ்வொருதேசமும் யுத்தத்தில் பிரவேசித்தன என்ற விவரம் பின்வருமாறு: நேசக்கட்சியார்-ஸெர்வியா 1914 ஜூலை 28; ருஷியா 1915 ஆகஸ்ட் 1; பெல்ஜியம் 1914 ஆகஸ்டு 2; பிரான்ஸ் 1914 ஆகஸ்டு 3, கிரேட் பிரிட்டன் 1914 ஆகஸ்டு 4; மாண்டிநிக்ரோ 1914 ஆகஸ்டு 7, ஜப்பான் 1914 ஆகஸ்டு 7' இடாலி 1915 மே; அல்பேனியா 1916 ஜனவரி, போர்த்துகல் 1916 மார்ச்சு; ருமேனியா 1916 ஆகஸ்டு; சத்துருக்கட்சியார் ஆஸ்டிரியா 1914 ஜூலை 28, ஜெர்மனி 1914 ஆகஸ்டு 1; துருக்கி 1914 நவம்பர்; பல்கேரியா 1915 அக்டோபர்.

ஜெர்மனியைச் சேர்ந்த சால்பரி என்னும் ஊர்களில் பெல்லூஞ் என்னும் புகைக்கூண்டை அத்தேசத்தின் மலைப்பாங்கான இடங்களில் செல்லும் ரெயில்வண்டிகளுக்குப் பூட்டப்பட்டிருக்கின்றனவாம். அந்த ரெயில் வண்டிகள் சாதாரணமான சமபூமியின்மேல் செல்வதைப்போல் செல்லுவதுடன், இடையில் பள்ளத்தாக்கு சுரங்கமல்லது மற்ற மலைக்குப்போகவேண்டியதாயிருந்தாலும் வாராவதி முதலியன சிலவில்லையாம். அந்தப் புகைக்கூண்டே ரெயில் வண்டியை மேலாகத்தூக்கி வைத்து விடுகின்றதாம் அவ்வித ரெயில் வண்டிகளில் 10 பாசஞ்சர்கள்தான் செல்லக்கூடுமெனச் சொல்லப்படுகின்றது.

விஸ்வகர்ம தொழிற்சாலைக்குரிய

ஆயுதங்கள்.

மனு, மய, த்வஷ்ட, சிற்பி, விஸ்வக்ஞரென்று சொல்லப்படும் ஐந்துவித தொழில்களுக்குரிய ஆயுதங்களில் சிலதைத் தருவித்துக்கொடுக்கும்படி பலர் நம்மைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனதால், அவ்வித ஆயுத வகைகளுக்கு நாம் கமீஷன் எஜண்டாயிருந்து இக்கம்பெனி மூலமாக எவருக்கு எவ்வித ஆயுதம் வேண்டியபோதிலும் அனுப்பச்சித்தமாயிருக்கிறோம். ஆகையால், வேண்டியவர்கள் அட்வான்சுடன் ஆர்டர் கொடுத்தால் காலதாமதமின்றி உடனே குறித்த சாமான்களை அனுப்பப்படும்.

விபரம்.

1. கருமார் ஆயுதங்கள். 2 தச்சர் ஆயுதங்கள், 3. கன்னார் ஆயுதங்கள்,
4. கல்தச்சர் ஆயுதங்கள், 5 தட்டார் ஆயுதங்கள்.

மேற்கண்டவைகளில் எவ்வித ஆயுதம் வேண்டுமோ அவைகளின் அளவுகளுடன் விபரமாய் எழுதவேண்டும். தவிர, இச்சாமான்கள் சீமை சாமான்களென்றும், அல்லது நாட்டு சாமான்களென்றும் விபரங்கண்டு எழுதவேண்டும்.

குறிப்பு:—கடிதம் எழுதுவோர் தங்கள் முழு விலாசத்துடன் தெளிவாகவும் விபரமாவும் எழுதவேண்டும். அவ்விதமில்லாத கடிதங்களுக்குப் பதில் எழுத சாத்தியப்படாது.

ரப்பர் (ஸ்டாம்பு) முத்திரைகள்.

தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் ஆகிய இப்பாஷைகளில் எவ்விதமான ரப்பர்ஸ்டாம்புகள் வேண்டுமானாலும், சுத்தமாகவும் நேர்த்தியாகவும் செய்து அனுப்பப்படும். ஆர்டர்களுடன் அட்வான்சும் மாதிரி தினுசும் அனுப்பவேண்டும். அட்வான்ஸ் அனுப்பாத ஆர்டர்கள் கவனிக்கபடமாட்டா.

கொ. கன்னியப்ப ஆச்சாரி,
ப்ரோப்ரைடர்,
நெ. 5/10 வேதகிரிமேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

P. V. Kannan & Co.,

Chintadripet, Madras.

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது

பக்திரசம் நிறைந்தது

பிரகலாதன்.

பாகவத புராணத்தில் கூறப்படும் பிரகலாதன் கதையை அறியாத தமிழர் இல்லை. அது நாடகரூபமாக நவரஸாலங்காரங்களுடன் இனிய எளிய தெளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே இனிய பாடல்கள் அமைந்துள்ளன. கம்பராமாயணம், பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. நாவல் படிக்கவிரும்பும் தற்கால ஜனங்களுக்கு நாவல் போலவும் நாடகத்தின் அலங்காரங்களை அறிந்து இன்புற விரும்புவோருக்கு நாடகமாகவும் இது அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் பாரதி பத்திராதிபர் சதாவதானம் ஸ்ரீமான் தெ. கிருஷ்ணஸ்வாமிப் பாவலரானவர். வேண்டுவோர் உடனே நமது கம்பெனிக்கு எழுதவேண்டும்.

இதன் விலை அணா 8.
தபாற்செலவு வேறு.

பி. வி. கன்னன் அண்டு கம்பெனி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

'பிரபஞ்ச பாஸ்கரன்'

என்னும்

ஓர் வாராந்திரத் தமிழ்ப் பத்திரிகை.

அன்பர்காள்! தேச ஊழியத்திற்காக பொதுப்படையாய் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து அதன்வாயிலாய் தேசப் பொதுஜன நன்மைக்குரிய வேதம், இதிகாசம், புராணம், வேதாந்தம் முதலான ஞானமார்க்கத்தைப்பற்றியும், முன்னோர் பெருமை, பக்தி, விரதம், கிரமமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய ராஜாங்கப் பொதுவிஷயங்கள், இன்னும் இதுபோன்று அதாவது பொதுவாய் தேசக்ஷேமத்துக்குரிய அரியபெரிய வியாசங்களை வெளியிட்டு வரவேண்டுமென்ற நன்னோக்கம் நம்மனதில் நெடுநாளாய்க் குடிகொண்டிருந்தது. அக்குறை நீங்குமாறு அடுத்த 1917-ம் ௵ ஜனவரி மாதத்திலிருந்து "பிரபஞ்சபாஸ்கரன்" என்னும் நாமத்துடன் டிம்மி 8 பக்கம் கொண்டதாக வெளிப்படுத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

இதன் ஒரு வருட சந்தா ரூபா மூன்று.

ஆனதால், நமது தமிழபிமானிகளனைவரும் இவ்வரிய பத்திரிகைக்கு இப்போதே சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரிக்க முன்வந்து தங்கள் முழுவிலாசத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன். அவ்வன்பர்களின் பெயர்களை நமது ரிஜிஸ்தர் புஸ்தகத்தில் பதிவு செய்துகொண்டு ஆரம்பப் பத்திரிகையை அவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். மற்ற விபரங்களனைத்தும் அப்பத்திரிகை மூலமாகவே தெரிவிக்கப்படும். நமது நன்னோக்கம் இனிதுமுடிய இறைவன் அருள்புரிவாராக.

விஸ்வகுலோத்தாரண அச்சுக்கூடம்.

இவ்வச்சுக்கூடத்தில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளில் லெட்டர்பேபர், கார்டு, கவர், பில்பாரம், ரசீது புத்தகம், நோட்டீஸ், முச்சலிக்கை, கைச்சாத்து, பலவித முகூர்த்தப் பத்திரிகை, புத்தகவகைகள் முதலானதும், ஆர்டர் பிரகாரம் கெடுவு தவறாமல் வெகு சுத்தமாயும் சகாயமாயும் பார்வைக்கு அழகாயுஞ் செய்து கொடுக்கப்படும்.

வெளியூர்வாசிகள் ஆர்டர் அனுப்பும்போதே அட்வான்ஸும் அனுப்பினால் வேலையை முடித்து வி. பி. மூலமாக அனுப்பி மிச்சப்பணத்தைப் பெற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்கள் கடிதமூலமாகவாவது நேரிலாவது தெரிந்துகொள்ளலாம்.

விஸ்வகர்ம குலோபகாரி.

இஃது

பெயர் மாத்திரத்தில் "விஸ்வகர்ம குலோபகாரி" என வழங்கினும்

எம்மதத்தினருக்கும் பொதுவாய் உபயோகப்படக்கூடிய

பற்பல விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

இவ்வரிய மாதாந்தச் சஞ்சிகை, சென்னை சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகர்ம வேதாத்தியயனப் பாடசாலையினின்றும் 1913ம் வருஷத்திலிருந்து நடந்தேறிவருகிறது. ௸ பத்திரிகைக்கு நமது குலாபிமானிகளும், மற்றும் கற்றுணர்ந்த வித்வசிகாமணிகளும் விஷயதானம்செய்துவருகின்றார்கள்.

இப்பத்திரிகையில் வேதம், இதிகாசம், புராணம், தர்க்கம், வேதாந்தம், கைத்தொழில், சிற்பம், முன்னோர்பெருமை, இனிய கதைகள், பல தேச வர்த்தமானம் முதலிய விஷயங்கள் செவ்வனே விளக்கப்பட்டு ஆடவர்களும், பெண்மணிகளும் சுலபமாய் அறிந்துகொள்ளும் செவ்விய தமிழ் நடையில் எழுதப்பட்டுவருகின்றன.

இதன் வருட சந்தா ரூபா மூன்றுதான்.

ஆகவே, இதனைக்கண்ணுறும் கல்விமான்களனைவரும் இப்பத்திரிகையை ஆதரித்து அழியாப்புகழையும் புண்ணியத்தையும் நிலைநிறுத்தும்படி [illegible] கேட்டுக்கொள்கிறேன். சென்ற இரண்டுவருடப் பத்திரிகை ஒரே புத்தகமாக பைண்டு கட்டப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 5. வி-பி சார்ஜ் பிரத்தியேகம்.

விஸ்வகர்ம புத்தகசாலை.

இப்புத்தகசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு கிரந்தம், நாகரம் முதலிய பாஷைகளிலுள்ள எல்லாப் புத்தகங்களும், பாடசாலைக்குரிய புத்தகங்களும், நோட்டு புத்தகங்களும், டிராயிங் புத்தகங்களும் கிடைக்கும். எம்மிடமில்லாத புத்தகங்களையும் தருவித்து வெளியூர் ஆர்டர்களுக்கு வி. பி-யில் அனுப்பப்படும்.

ஸ்கூல் பிள்ளைகளுக்கு வேண்டிய பலகை, பலபம், பென்சல், பேனா முதலிய சாமான்களும் கிடைக்கும்.

கவனிப்பு:—நான்கணாவுக்கு குறைவுபடும் புத்தகங்களுக்கும், புக்போஸ்டுக்கும் ஸ்டாம்பு அனுப்பினால் உடனே புக்போஸ்டில் அனுப்பப்படும். விலாசம் தெளிவாக எழுதவேண்டும்.

1622)

...ாய்விட்டது!　　வெளியாய்விட்டது!!

பக்திரசம் நிறைந்தது.

பிரகலாதன்

பாகவதபுராணத்தில் கூறப்படும் பிரகலாதன் கதையை அறியாத தமிழர் இல்லை. அது நாடகரூபமாக நவாலங்காரங்களுடன் இனிய எளிய தெளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே இனிய பாடல்கள் அமைந்துள்ளன. கம்பராமாயணம், பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. நாவல் படிக்கவிரும்பும் தற்கால ஜனங்களுக்கு நாவல் போலவும் நாடகத்தின் அலங்காரங்களை அறிந்து இன்புற விரும்புவோருக்கு நாடகமாகவும் இது அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் 'பாரதிபக்திராதிபர் சதாவதானம்' ஸ்ரீமான் தெ. கிருஷ்ணஸ்வாமி பாவலராவார். வேண்டுவோர் உடனே நமது கம்பெனிக்கு எழுதவேண்டும்.

இதன் விலை அணா 8.

தபாற்செலவு வேறு.

தனபதி.

படிப்பவர் மனதைப் பரமானந்தத்தில் ஆழ்த்தும் பலவிதகற்பனாலங்காரக்கதை. இதில் தனபதி என்னும் அரசன் தன் வண்ணானை அரசனாக நியமிக்க, அவ்வண்ணான் அப்போதும் தன் புத்திபோகாமல், அரண்மனையை அவலமாக்குவது படிக்கப்படிக்க விடா நகைப்பை விளைவிக்கும்

இதன் விலை அணா 2.　　வி. பி. சார்ஜ் பிரத்யேகம்

தனிப்புத்தகம் வேண்டுவோர் 2½-அணா தபால் லேபில் அனுப்பவேண்டும்.

பி. வி. கண்ணன் அண்டு கம்பனி,
சிந்தாதிரிப் பேட்டை சென்னை.

எப்பொழுதும்

எங்கும் புகழ்பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை

உபயோகியுங்கள்.

32-மாத்திரைகளின் விலை ரூ 1.

தேகசுகம் மனோபலம்

இவைகளுக்குச் சிறந்த மருந்து.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, மதராஸ்.

M. E. RAJAM & CO.,
Chintadripet Madras.

நோயற்ற வாழ்வு.

உலகில் ஒருவன் குபேர சம்பத்துடன் கூடியிருந்தவனாய் இருந்தபோதிலும், அவன் நோய்களால் கஷ்டப்படுவானாயின், அப்பெரிய சம்பத்தால் என்ன பயன்? இதைப்பற்றி அன்றோ நமது பெரியோர்கள் எல்லா செல்வங்களிலும் உயர்ந்தது நோயற்ற வாழ்வு என்பதை விளக்க 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்லியிருக்கின்றனர். அதை அறிந்திருந்தும் பெரும்பாலார், பொருளைத் தேடுவதிலும் பலவகைப் பட்டங்களை மேற்கொள்வதிலுமே அல்லாது தேகத்தை நல்ல நிலைமையில் இருக்கப்பார்ப்பதில்லை. ஐயா! அவர்கள் இரவும் பகலும் கஷ்டப்பட்டுப் பொருளைச் சம்பாதிப்பது எதற்காக? [illegible] பட்டினத்தடிகள் கூறியபடி '[illegible]' அன்றோ! நாம் ஓடி ஓடி உழைத்துக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளால் நம்முடைய தேகத்தை நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளாவிட்டால், நாம் மேலும் பலவாய பயன்களை அடைய ஏதுவாயிருக்கும் அதனால், ஒருபயனும் அடையமாட்டோம். முற்காலத்தில் இருந்தவர்களோ நோய்க்கிடம் கொடாது, ஆரோக்கிய திடகாத்திர தேகிகளாய் இருந்தனர். அவர்களெல்லோரும் தங்களுடைய தேகத்திற்கு வளம் செலுத்தி வந்ததனால் அங்ஙனம் இருந்தனர். இக்காலத்திலோ, அநேகம் [illegible], அநேகர் அடிக்கடி ஏதாவது ஒரு நோயால் வாடி வருந்துகின்றனர். ஒரு மனிதன் நோயில்லாமல் வாழவேண்டும் என்று எண்ணினானாகில், அவன் நோயில்லாமலே வாழ்வான். ஆனால், அங்ஙனம் நோயில்லாமல் வாழ பெரியோர்கள் சொல்லியபடி பத்தியத்துடன் இருக்கவேண்டும். அக்காலத்தில் இருப்பவர் [illegible], கண்ட சமயங்களில் கண்டதைத் தின்று வருகின்றனர். அவ[illegible] பெண்களுடன் கூடுகிறவர்களுமிருக்கின்றனர். [illegible] செய்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதனால் நாளடைவில் [illegible], வயிற்றுவலி, கைகால்வலி, தேகஅசதி, மயக்கம், மூர்ச்சை [illegible] முதலான வியாதிகள் அவர்களை அணுகுவதுடன், சோர்வு [illegible] ஆயுளையும் அவர்களை நெருக்கிப்பிடிக்கின்றன [illegible]

[illegible]டைய தேகத்தை நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டி; இப்போதே எங்கள் கம்பெனியில் தயாரிக்கப்பட்டு விற்றுவரு[illegible]ல சஞ்சீவி லேகியத்தை வாங்கி உண்ணுங்கள்.

மஹாபல சஞ்சீவி லேகியமானது சாமானியமானதல்ல. போலி மருந்துகளைப்போல, எங்கள் லேகியத்தை நீங்கள் உண்டால், எங்களுக்கு அதனால் ஒன்றும் இல்லை. ஆனால் நீங்கள் தான் அ[illegible] பலபராக்கிரமத்தையும், ஆரோக்கிய திடகாத்திர தேகத்தையும், [illegible] பலத்தையும், வீரியவிருத்தியையும் ஞாபக சக்தியை. நோயற்ற வாழ்வையும் கொடுக்க வல்ல சஞ்சீவி லேகியத்தின் பலனை அடையாதவர் ஆவீர். நாங்கள் இம்மருந்தால் எல்லோரும் மஹாராஜாக்களினும் சரி. ஏழைகளாயினும் சரி. வாங்கி அதன் பலன் அடையவேண்டும் என்றே 20-நாள் சாப்பிடக் கூடிய லேகியத்தின் விலை ரூ 1-4-0 என்று வைத்திருக்கிறோம்.

இந்த லேகியத்தில், ஆயுர்வேத சாஸ்திரத்தில் சொல்லியுள்ள உயர்ந்த மூலிகை வகைகளும், விதை [illegible]களும், கஸ்தூரி, பச்சைகற்பூரம், முதலான விலையுயர்ந்த சரக்குகளும், கடைசரக்குகளும் சேர, 10 புடம் போட்ட வெள்ளிபஸ்பமும் கலந்து தயாரிக்கிறோம். இந்தமருந்தினால் நீங்கள் அடையும் சக்தி அவ்வளவு இவ்வளவு என்று எங்களால் எழுதமுடியாது. சாப்பிட்டுப் பலபேர், எங்களுக்கு ஆயிரக்கணக்காய் எழுதியிருக்கும் நற்சாட்சிபத்திரங்கள் மருந்தின் பெருமையை உங்களுக்குத் தெரிவிக்கிறது.

நீங்கள் உங்களுக்கு எவ்விதமான வியாதியும் அணுகாது இருக்கவேண்டுமானாலும், இருக்கும் நோய்கள் ஓடிப்போக வேண்டுமானாலும், உடனே மகாபலசஞ்சீவிலேகியம் அனுப்பும்படி சொல்லும். வீணாய் அட்டகாச விளம்பரங்களைப் பார்த்து பணத்தை விரயம்செய்யாதீர்கள். ஒருநாள் மருந்திலேயே குணத்தைக்காண்பீர். பெண்களும் 6-வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளும் சாப்பிடலாம். கர்ப்பிணிகள் இம்மருந்தை உட்கொள்ளக்கூடாது. உடனே எழுதி அதன் பலனை அடைந்து சுகஜீவிகளாய் வாழுங்கள்.

மஹா பல சஞ்சீவி லேகியம் விலை ரூபா. 1 4 0

எம். ஈ. ராஜம் அண்டு கம்பெனி,
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.